# பாலர் கல்வி

| தொகுதி 6 | 1941 ௵ ஏப்ரல் ௴<br>விஷு ௵ சித்திரை ௴ | பகுதி 1 |
|---|---|---|

## யோசனை — பாவனை — ஸ்வப்நம்*

(Thought — Imagination — Dream)

---

ஸ்ரீ M. S. ஸ்ரீநிவாஸ சர்மா, M. A.

யோசனை செய்தல், அனுமானித்தல், உந்நத லக்ஷியங்களை நிர்மாணித்தல், வருங்காலத்துக்குத் திட்டம் செய்தல், கற்பனா சக்தியால் விஞ்ஞான சாஸ்திரங்கள், வேதாந்த தர்சனங்கள், சிற்பங்கள், கவிகள் முதலியவைகளியற்றல், ஆகிய இவைகள் மனிதனுடைய விசேஷப் பெருமைகளாகும். உண்மையை உணர்வதற்கும், அறிவை விருத்தி செய்வதற்கும் யோசனை அவசியம். விழித்திருக்கும் போதெல்லாம் நாம் யாவரும் சிந்தனைத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறோம். ஒரு விஷயம் நமக்குத் தெரியும் என்று சொன்னால், அதைக் குறித்து நாம் ஆழ்ந்து சிந்தித்து, அதன் காரண காரியங்களை அறிந்து கொண்டோம்—என்று தாத்பரியம். ஒரு காரியத்தைத் தொடங்குவதற்கு முன்னேயே, தீர்க்காலோசனை செய்து, அதனால் உண்டாகக் கூடிய லாப நஷ்டங்களையும், சுகதுக்கங்களையும் ஊகித்து உணர்ந்து கொண்டால், வாழ்க்கை எவ்வளவோ இனிமையாக நடைபெறும். ஸமயோசித புத்தியும் யுக்தாயுக்த அறிவும் யோசனையின் கனிகளாகும்.

சிந்தனை:—ஒரு குறிப்பிட்ட பிரயோஜனத்தை உத்தேசித்துத் தான் சிந்தனை செய்ய ஆரம்பிக்கிறோம். நெருக்கடியான நிலையில் நாம் அகப்பட்டுக் கொண்டால் அதிலிருந்து எப்படித் தப்பித்துக் கொள்ளலாம் என்பதை யறிய யோசனை செய்ய வேண்டியது அவசியமாகிறது. பூகம்பம், ரயில் விபத்து, சுழற்காற்று, ராஜீய புரட்சி, வேலை நிறுத்தம்

---

* திருச்சி அகில இந்தியா ரேடியோவின் அநுமதியுடன் பிரசுரிக்கப்படுகிறது.

முதலிய ஸம்பவங்கள் உண்டானல், அவைகளின் காரணங்கள் யாவை என்பதை உணரும் பொருட்டு யோசனை செய்ய ஆரம்பிக்கிறோம். தர்க்க முறைப்படி அநுமானித் துணர்ந்த அறிவு, மூடபக்தியையும் பயத்தையும் நீக்கி, சக்தியையும் தைரியத்தையும் அளிக்கிறது. "எதிர் காலத்திற்கு என்ன தேவை? வாழ்க்கையை எப்படி ஒழுங்குபடுத்திச் சுகம் பெறுவது?"—இவைகளைச் சிந்தனு சக்தியால் தெரிந்துகொண்டு, முன்னுடியே தகுந்த ஏற்பாடு செய்துகொள்ளலாம்.

நம்முடைய கொள்கைகளை யாராவது எதிர்த்தாலும் சரி, பிறருடைய அபிப்பிராயங்களை நாம் மறுத்து எதிர்வாதம் செய்ய விரும்பினாலும் சரி, நாம் உடனே ஆழ்ந்த சிந்தனையிலமர்ந்து, நம்முடைய சொந்தக் கொள்கைகளை என்னென்ன ஸமாதானங்களைக்கொண்டு ஸித்தாந்தப்படுத்தலாம் என்பதைக் கண்டுபிடிக்க முயல்கிறோம்.

ஸந்தேஹம் யோசனையின் தூண்டுகோல். நாஸ்திக வாதமும் அவநம்பிக்கையும் ஆழ்ந்த யோசனைக்கும், அறிவு விருத்திக்கும் அஸ்திவாரங்கள். ஸந்தேஹம் உதித்ததும், ஸாதகபாதகமான அத்தாக்ஷிகளைத்தேடி, ஸத்யத்தை ஸ்தாபிக்கத்தக்க நிரூபணங்களை யோசித்தறிகிறோம். விஞ்ஞான சாஸ்திரங்கள் ஸ்தாபித்துள்ள உண்மைகள் எப்போது வேண்டுமானாலும் கடுமையான பரிசீலனையிலுங்கூட ரூபித்து நிலைநாட்டக்கூடிய பெருமை பெற்றுள்ளன. விஷயங்களை உள்ளபடி தெரிந்துகொண்டால்மாத்திரம் போதாது. அவைகள் ஏன் அம்மாதிரியிருக்கின்றன என்பதையும் அனுமானித்தறியவேண்டும். இந்த அறிவு கூர்மையான யோசனையால்தான் உண்டாகும்.

**கற்பனை**:—ஞாபகசக்தியும் சிந்தனு சக்தியும் நன்றாக வளர்ந்து பக்குவ நிலையடைந்தால் பாவனுசக்தி உதயமாகிறது. பாவனுசக்திதான் மனிதனுக்கு உயர்வைத் தருகிறது. சிருஷ்டிக்கும் வல்லமை கற்பனுசக்தியின் மஹத்துவம். நாகரிக முன்னேற்றத்தின் முக்கிய லக்ஷணம் கலை வளர்ச்சியாகும். கலைகள் யாவும் பாவனுசக்தியின் குழந்தைகள். கவி, கதை, விஞ்ஞானம், நாடகம், வேதாந்தம், சிற்பம், ஸங்கீதம், முதலிய கலைகள் கற்பனுசக்தியின் சிருஷ்டிகள். நற்குண நன்னடைத்தைகள் உத்தம லக்ஷியங்களால் தூண்டப்படுகின்றன. இந்த லக்ஷியங்கள் நீண்டகால யோசனையினல் உண்டாக்கப்படும் மனக்கற்பிதமான எண்ணங்களாம். அதனல்தான் மானிடஜன்மத்தில் தர்மம், ஸத்தியம், சீலம், வீரம் முதலிய உத்தமகுணங்கள் தாண்டவமாடுகின்றன. மிருகங்களுக்கு இந்தப் பாவனு சக்தியில்லாமையால், அவைகள் உண்பதிலும், உறங்குவதிலுமே தம் வாழ்க்கையைக் கழிக்கின்றன.

ஸஹோதரத்வம், பரோபகாரம், ஸ்நேகம் முதலிய ஸமூஹ குணங்கள் மனக்கற்பனை மிகுந்த மனிதர்களிடந்தான் காணப்படும்.

பிறருடைய கஷ்டங்களையும் துக்கங்களையும் பாவனா சக்தியால் உணர்ந்தால் தான் அவர்களிடம் அநுதாபமும் கருணையும் காட்டி, அவர்களுக்கு ஸஹாயம் செய்ய முடியும். தெய்வ பக்தியும் தர்மகுணமும் பாவனா சக்தியின் விசேஷ பலன்கள்.

பாவனாசக்தி இரண்டு வகைப்பட்டது: (1) நாவல்கள், சிறு கதைகள், கவிகள் இவைகளை இயற்றும் பாவனா சக்தி ஒன்று. இந்தப் பாவனை ஒரு கட்டுக்கும் அடங்காமல் தன் இஷ்டப்படி நிர்மாணிக்கும் இயல்புடையது. இதை மனோலீலை என்று சொல்லலாம். இந்தக் கற்பனா சக்தியின் சிருஷ்டிகள் மனிதர்களை ரமிக்கச்செய்து, அவர்களுக்கு ஆனந்த மளிக்கும் நோக்கத்தை யுடைத்தாயிருக்கின்றன. (2) கற்பனா சக்தியின் மஹிமையால்தான் நுட்பமான இயந்திரங்களும், உலக ரஹஸ்யங்களும், வேதாந்த தத்துவங்களும் கண்டுபிடிக்கப்படுகின்றன. இவைகள் மனம் போனபடி போகாத வண்ணம், சாஸ்திரப் பிரமாணங்களுக்கு ஒத்தவாறு, போதுமான அத்தாக்ஷிகளுடன் ரூபிக்கப்படவேண்டும்; இவைகள் எந்த இடத்திலும், எந்த சமயத்திலும் பரீக்ஷைக் குட்பட்டு ருஜுப்படுத்தக்கூடிய ஸத்தியம் பொருந்தியிருக்கவேண்டும். இதுதான் இரண்டாவது விதமானக் கற்பனா சக்தி. இதன் நோக்கம் ஸத்தியத்தை ஸ்தாபித்து, நாகரிக வளர்ச்சிக்கும், கலை விருத்திக்கும் மூலகாரணமாயிருத்தலாம்.

கனவு:—மனம் விழித்திருக்கும்போது மாத்திரம் வேலை செய்வதாக நினைக்கக்கூடாது. தூங்கும்போது கூட அது மும்முரமாகத் தன் தொழிலை நடத்துகிறது. அத்தொழிலுக்குக் **கனவு** என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஸ்வப்நத்தின் தத்துவம் ஒரு பெரிய மர்மமாகவே இருந்து வருகிறது. கனவு என்பது என்ன? நாம் ஏன் கனவு காண்கிறோம்?—இந்தக் கேள்விகளுக்கு இப்போது மானஸ நூல் சாஸ்திரீய முறையில் பதிலளிக்க முற்பட்டிருக்கிறது. ஆதி முதற்கொண்டு கனவை எதிர்கால சம்பவங்களைச் சூசனையாகக் காட்டும் கருவியென்றும், அத்தியந்த பக்தர்களுடன் கடவுள் தோன்றிப் பரஸ்பரம் ஸம்பாஷணை செய்யும் ஸாதனம் என்றும் நம்பி வந்தார்கள். ஆனால் இந்த நம்பிக்கைகளுக்கு ஆதாரம் சிறிதுமில்லை.

கனவு ஒருவிதமான பாவனா சக்தி. மனம் விழித்திருக்கையில் தன் கற்பனா சக்தியின் பிரபாவத்தால் கதை, கவி முதலியவைகளை நிர்மாணிப்பதைப்போல, தூங்கும் போதுங்கூட அதே சக்தியின் பலத்தால், "**கனவு**" என்னும் மானஸ அநுபவத்தை யுண்டாக்குகிறது. ஞாபகக் களஞ்சியத்தில் புதைந்து கிடக்கும் பால, யௌவன அநுபவங்களின் துண்டு துணுக்குகள், தூக்கத்தில் ஒரு வரம்புக்கும் அடங்காமல் விபரீத முறையில் இணைக்கப்பட்டு ஸ்வப்ந உலகம் நிர்மாணிக்கப்படு

கிறது. பகுத்தறிவும், விமர்சன சக்தியும் தூக்கத்தில் மறைந்திருப்பதால், கனவுகள் கண்டபடியெல்லாம் ஆக்கப்படுகின்றன. விழித்திருக்கையிலேயே வேலையற்றுச் சோம்பலாய்ச் சிறிது நேரம் உட்கார்ந்திருக்கையில் என்னென்ன ஆகாசக் கோட்டைகளை நம் மனம் கட்டுகிறது? "அல்நாஸ்கர்" கதை எல்லோருக்கும் தெரியுமல்லவா? அதை நாம் "பகற்கனு" வென்கிறோம். உலகத்தில் வீரச்செயல்களைச்செய்து, பெரும் பிரக்கியாதியும்பெற்று, ஏராளமான திரவியங்களையும் அழகிய மங்கைகளையும் ஸம்பாதித்துப் பெரிய வாழ்வு வாழ்வதாக நாம் பகற்கனு காண்கிறோமல்லவா? இருபது ரூபா குமாஸ்தா, ஆபீஸில், தன் ஸ்வாரஸ்ய மற்றக் கடமைகளைச் சீவனற்றுச்செய்துகொண்டிருக்கையில், அவன் மனம் விதவிதமாக ஆகாசக்கோட்டைகளைக் கட்ட ஆரம்பித்து விடுகிறது.

காரணம்? சுதந்திரத்தோடு, இஷ்டப்படி வாழ எல்லாருக்குந்தான் ஆசை. ஆனால் அந்த ஆசையை நிறைவேற்றுவதற்கு வேண்டிய அறிவும் ஆற்றலும், ஸந்தர்ப்பங்களும் தைரியமும் எல்லோருக்கும் வாய்க்கிறதா? ஆகையால், வாழ்க்கையில் நிறைவேற்றிக்கொள்ளமுடியாத ஆசைகளையும், விருப்பங்களையும் விழித்திருக்கையில் பகற்கனுக்கள் மூலமாயும், தூங்குகையில் ஸ்வப்நங்கள் மூலமாயும் தீர்த்துக்கொண்டு ஒருவாறு மனத்திருப்தியடைகிறோம். ஆகவே கனவுகளைக் கற்பனையுலகத்தில், மனத்தில் ஆழ்ந்து அமர்ந்து கிடக்கும் விருத்தி பெறாத ஆசைகளைத் திருப்தி செய்விக்கும் உள் அனுபவங்கள் என்று சொல்லலாம்.

கனவின் பொருள்:—திருடன் இருட்டில் நடுராத்திரியில் வந்தாலுங்கூட முகமூடி அணிந்து, தான் இன்னான் என்பதைக் காட்டிக்கொள்ளாமல் மறைத்துக்கொள்கிறானல்லவா? அதைப்போலவே, வாழ்க்கையில் நிறைவேறாத துன்மார்க்க ஆசைகளும், அயோக்கிய எண்ணங்களும், அக்கிரம விருப்பங்களும், தூக்கத்தில் பிரக்ஞையும் பகுத்தறிவும் மறைந்திருக்கிற ஸமயம் பார்தது, ஸ்வப்ந அனுபவமூலம் திருப்தியடையும் பொருட்டு, தம் நிஜஸ்வரூபத்தை மாற்றிக்கொண்டு வருகின்றன. பசியோடும் தாகத்தோடும் படுத்து உறங்கிவிட்டால், பலவிதமான பானங்களையும், விதவிதமான விருந்துகளையும் அருந்துவதாகக் கனவு காண்கிறோமல்லவா? பசியும் தாகமும் அநீதமான ஆசையல்ல. ஆகவே, அவைகள் தம் ஸ்வரூபத்தில் தோன்றி மானஸ திருப்தியடைகின்றன. ஆனால் அடுத்த வீட்டுக்காரனின் மனைவியின் மீது காமம் ஏற்பட்டால், அந்த அயோக்கிய விருப்பம் கனவில் தோன்றும்போது, நாம் அந்த அண்டை வீட்டுக்காரனுடைய மோட்டாரை அவனைவிட சாமர்த்தியமாக ஓட்டுவதாகக் கனவு கண்டு நமது உள் விருப்பத்தைத் திருப்தி செய்துக்கொள்கிறோம். குழந்தைப்பருவம் முதல் மனதில் உதிக்கும் துராசைகளும், அக்கிரம விருப்பங்களும் வெளிக்கிளம்ப மாட்டாமல், பிரக்ஞைக்கு அடியில் உள்

ளான்மாவில் (The Unconscious) அழுத்தப்பட்டு அமுங்கிக் கிடக்கின்றன. அவைகள் தூங்கும்போது கனவில் தோன்றிப் போலித் திருப்தியடைந்து ஒருவாறு ஆறுதலடைகின்றன. விழித்திருக்கும் போது மனதில் உதிக்கும் விருப்பங்களே அவ்வப்பொழுது திருப்தி செய்து கொள்ளக்கூடிய திறமையும் ஸந்தர்ப்பங்களும் நமக்கு வாய்க்குமாயின் கனவு என்கிற அநுபவமே ஏற்பட அவசியமில்லே. ஸர்வ வல்லமையுள்ள மஹா புருஷர்களன்றே பூர்ணத்துவத்தையடைந்து, ஆசைகளே அறவே யகற்றி நிஷ்களங்கமான பரிசுத்த மனமுடையவர்களாயிருகிறர்கள்? அவர்களுக்குக் கனவுகள் என் உண்டாகின்றன? ஆசையற்ற மனே நிலேயும், பரிபூர்ணமாக நிறைவேற்றப்பட்ட விருப்பங்களும் உடைத்தாயிருப்பவர்கள் கனவுகாண ஆவசியகமேயில்லே. கைக்கெட்டாத வஸ்துக்களேக் குறித்துக் கனவுகாண வேண்டியிருக்குமே யொழிய கையிலிருக்கும் வஸ்துக்களேப் பற்றியாராவது கனவு காண்பார்களா?

மனநூலின் அவசியம் :—மானஸ சாஸ்திரம், மனித வாழ்க்கையின் மூல ரஹஸ்யம் எது என்பதைத் தெளிவாகக் காட்டி, எந்த விதத்தில் அதை ஒழுங்கு படுத்திஞல் மன ஆநந்தத்தையும் ஆத்ம சாந்தியையும் பெறலாம் என்பதை ஸ்தாபித்தலேயே நோக்கமாகக் கொண்டுள்ளது. மனிதனுக்குத் தன்னேத்தான் அறிவதைக் காட்டிலும் மேலான கடமை எதுவுமில்லே. தன்னறிவு பெற்ருல்தான் வாழ்க்கையை ஸரியான வழியில் நடத்த இயலும். தன்னறிவை ஸம்பாதிப்பதற்கு இன்றியமையாத கருவி மனநூலாகும்.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்று ஒரு நவீனகவி பாடிஞரல்லவா? அதுவேதான் ஆனந்த வாழ்வின் ரஹஸ்யமும். நம்முடன் பிறந்த இயற்கைச் சக்திகளும், உணர்ச்சிப் பெருக்குகளும், தமக்குள் முரண் படாமல் ஒன்றுகூடி ஐக்கியப்பட வேண்டும். நம்தனி வாழ்க்கையை ஸமூஹ வாழ்க்கையுடன் இணேத்துப் பிறர் இன்பதுன்பங்களே நம்மவையாகக் கருதி, பிறர்க்கெனவே நாம்வாழ, நம்மை ஒழுங்குபடுத்திக் கொள்ளவேண்டும். இதுதான் மனித அனுபவத்தின் தேர்ந்த முடிவு. இதுவேதான் மனநூலின் துணிபும்!

# வாழ்க்கை சம்பவங்களை அடிப்படையாகக் கொண்ட பாடதிட்டம் V.

---

S. ஜகந்நாதன், டீச்சர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை.

## 9. வெளிச்சமும் விளக்குகளும்

### 1. சம்பாஷணை

இரவு, வெளிச்சம், விளக்கு: இரவில் பிரகாசம். வீடு, தெரு, கடைவீதியிலுள்ள கடைகள், ரயில்வே ஸ்டேஷன், தபாலாபீஸ் முதலிய ஆபீஸ்கள், கோயில், கோயில் உற்சவம் இங்கு காணப்படும் விளக்குகள் அல்லது வெளிச்சம் கொடுப்பதற்குச் செய்துள்ள ஏற்பாடுகள். சில விளக்குகளைக் கவனித்தல்: விளக்கின் பாகங்கள்: பாதம், தண்டு, எண்ணெய் நிரப்பும் காய், திரி, திரிஏற்றி இறக்கும் சுரை. காற்று போகவர ஏற்பாடு, புகைபோக்கி, வெளிச்சத்தை மற்றும் பிரகாசப்படுத்த அல்லது மங்கச்செய்ய சில ஏற்பாடுகள்.

குத்து விளக்கு, சுவரில் மாட்டும் விளக்கு, கையில் பிடித்துச் செல்லும் விளக்கு, மேஜை விளக்கு: இவைகளைக் கவனிக்க.

### 2. உல்லாசப் பிரயாணம்

கூடுமானால் விளக்கு வார்ப்படம் செய்யுமிடங்கள், கண்ணாடி தொழிற்சாலை இவற்றைப் பார்வையிடவும்.

**கடைத்தெரு**:—பலவித விளக்குகள், சிம்னிகள்; விளக்குகள் சிம்னிகள் எங்கிருந்து வரவழைக்கப்படுகின்றன அல்லது செய்யுமிடங்கள் - மேலே ஒட்டப்பட்ட துண்டுக் காகிதங்களைச் சேகரிக்கவும் - அவைகளின் விலை; அவைகளுக்கு ஏற்ற எண்ணெய்; செக்கு; கிரவின் எண்ணெய் அளவுகள், விலை.

### 3. கைவேலை


**களிமண்**:—அகல், கல்விளக்கு, தகரவிளக்கு முதலியன.

**சித்திரம்**:—பலவித விளக்குகள், புட்டி, புனல், சிம்ணிகள்.


**துணி**:—திரிதிரித்தல்.

**படம் சேர்த்தல்**:—பலவித விளக்குகள்.

**வர்ணக்காகிதம், மூங்கிற்சிம்பு**:—இவைகள் கொண்டு பலவித விளக்குகள் – தொங்கவிடக்கூடியபடி, எடுத்துச் செல்லக்கூடியபடி:



குறிப்பு :—இங்குள்ள சித்திரங்களின் அச்சுகள் "கலைமகள்" ஆபீஸால் அன்புடன் அளிக்கப்பட்டவை,




**4. வெளிச்சம், விளக்கு: இவற்றின் வரலாறு சோதனை, சரித்திரம்:**

உஷ்ணம்.—கையுடன் கையை நன்றாய்த் தேய்க்க. மரத்துடன் மரத்தைத் தேய்க்க.

நெருப்புப் பொறி:—

(1) வண்டியின் இருப்புப்பட்டை கல்லுடன் உராயும் பொழுது

(2) சாணைக் கல்லில் கத்தியைத் தீட்டும்பொழுது




(3) கல்கொத்தன் உளியால் கல்லைப் பொளியும் பொழுது

(4) ஜட்கா குதிரையின் லாடம் கல்லில் அழுந்தி உராயும் பொழுது


நெருப்பு:—

(1) காட்டு மரங்கள் ஒன்றுடன் ஒன்று உராயும்பொழுது.




(2) நெருங்கின மூங்கில் உள்ள புதரில் காய்ந்தவை ஒன்றுடன் ஒன்று உராயும்பொழுது.

(3) (சோதனை) பூதக்கண்ணாடியை வெயிலில் பிடித்து காய்ந்த குச்சி, மரத்துண்டு, காகிதம், தென்னை நார் இவற்றை எரித்துவிடலாம்.




கோழுப்பின் உபயோகம்:—காட்டுக் குழிகளில் கொழுப்பைச் சேர்த்து நெரிப்பு எரிய உபயோகித்தல்.

மண் பாத்திரம்:—திரி கொழுப்பு அல்லது எண்ணெய் போட்டு எரிய விடுதல்.



**எண்ணெய்:**—நாட்டு எண்ணெய், நல்லெண்ணெய், கடலை எண்ணெய், இலுப்பை எண்ணெய், மண்ணெண்ணெய்.

**புகைபோக்கி:**—அவசியம்: பலவித புகைபோக்கிகள்: குளிர்ச்சியான பிரகாசத்திற்குத் தகுந்தவை.




**நெருப்புப் பெட்டி:**—வெளிச்சம் அதிகப்படுத்த சாதனங்கள்.

**மற்றும் சில தேவைகள்:**—சிக்கனம், கண்குளிர்ச்சி, கண்பார்வை இவைக்குத் தக்க ஏற்பாடுகள்.

5. முன்ஜாக்கிரதை.

**A.** கட்டடங்களில் ஜலம், மணல் நிரம்பிய தொட்டிகள். அவற்றின் அவசியம். ஒன்று நெருப்புப் பரவாமலிருக்க, மற்றொன்று நெருப்பை அணைக்க.

வீடுகளில் நாம் அனைவரும் எடுத்துக்கொள்ளக் கூடிய முன் ஜாக்கிரதைகள் தினசரிப் பத்திரிகைகளில் வெளிவரும் விஷயங்கள்: தீபாவளி, கார்த்திகை சமயங்களிலும் உற்சவாதிகளிலும் ஏற்படக்கூடிய நெருப்பு சம்பந்தமான விபத்துக்கள். துணிகளை அஜாக்கிரதையாக வைத்துக் கொள்வதினால் ஏற்படக்கூடியவை. குழந்தைகள் பெண்கள் இவர்களின் அறியாமையினால் ஏற்படக்கூடியவை.

**B.** விளக்குக் கட்டுபாடு: தற்காலத்தில் தேவையாயிருக்கிறது. தெரு விளக்குகளுக்கு ஒரு குல்லாய் போடப்பட்டிருக்கிறது. அதன் அவசியம்: வெளிச்சத்தை மட்டுப்படுத்துவதே நோக்கம். அடியிலுள்ள விஷயங்களைப் படித்துக் கற்றுக்கொள்ளுதல்.

## மௌன வாசிப்பு

### நெருப்பு! ஜாக்கிரதை!!

I

**1.** புகைபோக்கியில்லாத விளக்கின் பக்கம் ஜாக்கிரதையாக இரு. பின்னலை முன்னால் தொங்கவிட்டுக் கொண்டோ அல்லது அலக்ஷிய

மாகத் துணியைப் பறக்கவிட்டுக் கொண்டோ, அருகில் செல்வது ஆபத்தாகும்.

2. சூது பவழம், செலுலாயிட் பொம்மை, ரப்பர் வளையல், துணி பொம்மை, ரப்பர் பொம்மை, கடுதாசி சாமான், மெல்லிய மர பொம்மை இவைகளில் நெருப்பு சீக்கிரம் பிடித்துக்கொள்ளும். ஆகவே நெருப்பு இருக்கிற இடத்தில் அல்லது சிம்னியில்லாத தீபத்தினருகில் மேலே சொன்னவைகளை கையில் பிடித்துக்கொண்டோ சிலவற்றை உடம்பில் பூட்டிக் கொண்டோ, தன்னை மறந்து விளையாடலாகாது.

3. சிலசமயம் நெருப்பு நேரே படாமல் இருக்கலாம். ஆனால் விளக்கின் மீதுள்ள கண்ணாடி, கம்பி, வளையம், இவை மூலமாக சூடு பட்டுத் தழும்பு ஏற்பட்டுவிடும். ஆகவே இவைகளின்மீது உடம்பு படாமல் சற்றுத் தள்ளியிருந்து நமது காரியங்களைச் செய்வது நல்லது.

4. தலைமயிர் பறந்துகொண்டும், தொங்கிக்கொண்டும், பிள்ளை, பெண்கள் விளக்கின் சமீபம் தலை குனிந்து படிக்கிறார்கள். மயிர் கொஞ்சம் பொசுங்கிக்கொண்டு வரும். உடனே கவனிக்காவிட்டால் ஆபத்து நேரிடும். ஆகவே சற்று தூரத்தில் உட்கார்ந்தே படிக்கவேண்டும்.

5. "இளங்கன்று பயமறியாது" என்ற பிரகாரம் சிறு குழந்தைகள் எரிகின்ற விளக்கு, எரிகிற அடுப்பு, கொதிக்கிற வெந்நீர் இவை சமீபம் சென்று தொட்டாலும் விளையாடினாலும் காயமேற்படும். அவ்வாறு செய்யாமல் பார்த்துக்கொள்வது பெரியோர் பொறுப்பு.

6. நெருப்பு அல்லது விளக்குகளை நல்ல வேலைக்காரனைப் போல் உபயோகிக்கவேண்டும். அவை நமக்கு அவசியமாயினும் நாம் அவற்றை அடக்கி யாளவேண்டும்.

## II

7. கூரைக்குச்சு வீடுகளில் சிம்னியில்லாத தகரவிளக்கை சுவரில் மாட்டுவதினாலும் ஆபத்து ஏற்படக்கூடும். சமையலறைக்குள்ளும் சமையல் செய்யும் பொழுதும் இந்த எச்சரிக்கைகளை ஞாபகம் வைக்க வேண்டும். உபயோகத்திற்குத் தேவையில்லாதபொழுது நெருப்பை அவித்து விடுவது மேல்.

8. தெருநடுவில் பீடி, சுருட்டு பற்றவிட்டு எரிகிற நெருப்புக் குச்சிகளையும், நெருப்புள்ள பீடி சுருட்டுத் துண்டுகளையும் சிலர் எறிந்து விடுகிறார்கள். தெருவின் நடுவில் திருஷ்டி கழிப்பதின் பொருட்டு நெருப்பையும் கொள்ளிக்கட்டைகளையும் எரிமுட்டைமீது வைத்துவிடுகிறார்கள் சிலர். இவர்கள் செய்வது தவறே. நாம் இவ்விடங்களில் செல்லும் பொழுது ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

9. கோயில் விளக்கு, தீவட்டி, வாணவேடிக்கை நடக்குமிடம் இங்கு சமீபமாகவும் செல்லல் ஆகாது.

10. தீபாவளியன்று பிள்ளைகளும் பெண்களும் தீபத்தினடியில் உட்கார்ந்து டபாஸ் வெடிக்கும் பொழுது உடம்பு, உடை இவைகளில் கவனம் வைத்தல் நலம்.

கார்த்திகை தீபம் அன்று பெண்கள் புது ஆடை ஆபரணம் அணிந்து நெருப்பு சமீபம் செல்லநேரிடுகிறது. சிறுவர் பலரும் மாவலி சுற்றுகிறார்கள். இவர்கள் அனைவரும் மேலே சொன்ன பொருத்தமான எச்சரிக்கைகளை ஞாபகம் வைப்பது ஆபத்திலிருந்து தப்புவதாகும்.

11. இரவில் படிக்கும் பொழுது தூக்கம் வந்தால் விளக்கை அணைத்து சுவரில் மாட்டிவிட்டுப்பிறகு படுக்கையில் படுத்துத் தூங்கு. ஞாபக மறதியாலும் அலுப்பினாலும் விளக்கின் சமீபம் தூங்கிவிடுவது தானே ஆபத்தை வருவித்துக் கொள்வது ஆகும்.

12. நெருப்புடன் கூட புகை இருக்கிறது. புகையும் அறையில் அடைந்து விட்டால் மூச்சுவிட நல்ல காற்று இருக்காது. விளக்கு, நெருப்பு இருக்கு மிடங்களில் புகைபோகத்தக்க ஏற்பாடுகளை அமைத்துக் கொள்ளுதல் ஏற்றதாகும்.

13. குப்பைகளைக் குவித்து எரித்து சாம்பலாக்கி விடுவது நல்லது. அப்பொழுது கெட்டகாற்று பரவாமல் இருக்கும். ஆயினும் நெருப்பு நன்றாக அவிந்து விட்டதா என்று பார்த்துவிட வேண்டும்.

14. நெருப்பு அல்லது புகைபோக்கியில்லாத தகரவிளக்கு, அகல் விளக்கு, மாக்கல் விளக்கு, குத்துவிளக்கு இவைகளின் பக்கத்தில் கிரஸின் எண்ணெயை இறைப்பது, ஊற்றுவது போன்ற காரியங்களைச் செய்வதைத் தவிர்க்கவேண்டுவது முக்கியமானது. கிரஸின் எண்ணெயில் ஒரு பொறிவிழுந்தால் போதும். நெருப்புப் பிடித்துக் கொண்டு விடும்.

## III

## சென்னை விளக்குகள்: கட்டுப்பாடுகளின் விவரம்

(சுதேசமித்திரன்)

வெளிச்சம் கட்டிடத்துக்கு வெளியே தெரியும்படி எவ்வித விளக்கையும் உபயோகிக்கக் கூடாது. விளக்குகளை வெளிச்சம் தெரியாமற்படி மறைவுகள் வைத்து மூடவேண்டும்.

அலங்காரத்துக்காகவோ விளம்பரத்துக்காகவோ கட்டிடங்களுக்கு வெளியே விளக்குகள் போடக்கூடாது.

எல்லாத் தெருக்களிலும் பொது விளக்குகளை குறைந்த பட்சமாக எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு மட்டில் வைத்துக்கொள்ள வேண்டும். பொது ஜனப்பாதுகாப்பு, போக்கு வரத்து முதலியவற்றை அனுசரித்தே அதைச்செய்யவேண்டும். போலீஸ் கமிஷனரால் நியமிக்கப்படும் அதிகாரியின் திருப்தியைப்பெற்றபின் அங்ஙனம் செய்தல்வேண்டும்.

சாதாரண எண்ணெய் விளக்கு மெழுகுவத்தி விளக்கு இவற்றைவிட அதிக பிரகாசமான விளக்குகளை எடுத்துச் செல்லக்கூடாது. தெருக்களிலோ, பொதுவான இடங்களிலோ அம்மாதிரி வைக்கவும் கூடாது.

வண்டிகளில் உபயோகிக்கும் சாதாரண எண்ணெய் விளக்குகளின் பிரகாசத்தைக் காட்டிலும் அதிகமாகப் பிரகாசமுள்ள விளக்குகளை வண்டிகளில் எடுத்துச் செல்லக்கூடாது; அவ்விளக்குகளின் வெளிச்சத்தை மங்கலாகச் செய்யாமல் எரியவிடக் கூடாது.

குறிப்பு:—இக்குள்ள துண்டுப் பிரசுரங்களை மனதில் படிப்பது, அவை சம்பந்தமாய் உபாத்தியாயர் பலவித அப்பியாசங்களை ஏற்படுத்தி பதில் வரவழைப்பது அல்லது எழுதச்சொல்லுவது ஏற்றதாகும். மௌன வாசிப்பு என்ற நூதனவிதிக்கு இக்குள்ள நான்கு அப்பியாசங்களும் ஏற்றவைகளே.

## 6, 7. கணித பாடங்களுக்கு அனுகூலமான புள்ளி விபரங்கள்

(உல்லாசப் பிரயாணத்தின்போது குறிப்பெடுக்கத் தகுந்தது)

| விளக்கின் பெயர் | விலை | சிம்னிமாத்திரம் |
|---|---|---|
| சுவர் விளக்கு | 0—6—0<br>0—7—0 | 0—1—3 |
| நிசி விளக்கு | 0—3—0<br>0—2—6 | 0—0—9 |
| தொங்கவிடும் விளக்கு | 0—7—0<br>0—8—0 | 0—2—0 |

குத்து விளக்கு, தகர விளக்கு, லாண்டர்ன், வண்டி விளக்கு: (விலை அறிக).

### விளக்கும் சிம்னி எண்ணெயும்

புட்டி, காலன், டின்: BK II 149.
(ரூ. 0—2—3) (0—13—0) (3—4—0) BK III 128; BK II 93.

லக்ஷதீபம்:—அகல் ஒருவருக்கு 100, 500, 1000, 5000 ஆக லக்ஷதீபம் போட: ஊரிலுள்ள விலையைக் கேட்டுத் தெரிந்துகொள்க:

காலணாவுக்கு ? வீதம்
நூறு ? வீதம் BK I 93.

ஊர்கோலம்:—விளக்கு வாடகை BK II 69.

கோயில் உற்சவம்:—தீவட்டி 2, 5, 10 முகம் தீவட்டி BK I 58.

எண்ணெய்:—தீவட்டி ஒன்றுக்கு 20 பலம், 25 பலம் ஆக 5, 10, 20, 25 தீவட்டிகளுக்குத் தேவையான எண்ணெய் BK II 95,96.

எண்ணெய் விலை:—நல்லெண்ணெய் வீசை விலை ரூ. 0—8—0
கடலெண்ணெய் ,, ,, ரூ. 0—6—0
இலுப்பெண்ணெய் ,, ,, ரூ. 0—7—0

எண்ணெய் ஆட்ட:—ஒரு காணம் எண்ணெய் ஆட்டத்தேவையான எள், வெல்லம்: (நேரில் கண்டறிந்து வரவும்)

கிடைக்கும் எண்ணெய், பிண்ணாக்கு: BK II 95.


எண்ணெய் அளவுகள், ஆடம் சொம்பு சேர் BK III 193.

(நூதன முறை கிண்டர்கார்டன் தினசரிக் கணக்கு புத்தகங்கள் பார்க்க.)

8. விளக்குகள், சிம்னிகள், செய்யப்படும் இடங்களை ஒரு தேச படத்தில் குறித்துக் கொள்ளவும். விளக்கின் மீது சிம்னியின் மீது அல்லது அவைகளிலிருந்து தொங்கும் ஒரு துண்டுக் காகிதத்திலிருந்து இவ் விஷயங்களை அறிந்துகொள்ளக்கூடும்.

9. கார்த்திகை தீபம் :—கதை - கொண்டாடும் விபரம் - திருவண்ணாமலை தீபம் - திருவண்ணாமலைக்கு யாத்திரை - மலை - மலைப்ரதக்ஷணம் - ஸ்ரீ ரமணாச்ரமம் - மலையின் வடிவம் - குகைகள் - புராதன ஸ்தலம் - திருவண்ணாமலைக்கு ரெயில்மார்க்கம் (சென்னை இராஜதானிப் படத்தில் குறிக்க.)

திருவிளக்கும் லக்ஷ்மியும் :—வெள்ளிக்கிழமையின் விசேஷம். திருவிளக்கே லக்ஷ்மி - வெளிச்சமும் க்ஷேமமும் - இருட்டு அந்தகாரம், மௌட்யம், துர்ப்பிக்ஷம் - கோயில்களில் லக்ஷ தீபம்.




10. புராதன விளக்குகள் :—கோயில்களில் காணலாம் - தீவட்டிகள் பலவிதம் - பந்தம் - அடுக்கு தீபம். பலவித பித்தளை தீபங்கள் - தீபாராதனை தீபங்கள்.

வாண வேடிக்கை அதிர்வேடிகள் முதலியன :

வெளிச்சமும், வெடியும் ; மின்னலும் இடியும் :

11. விளக்கு ஏற்றும் விதம் :—தினப்பழக்கத்திலுள்ள இரண்டு மூன்று விளக்குகளை ஏற்றப் பழக்கம். நன்றாகத் துடைக்கப் பழக்கம் :

துடைப்பதற்கு தெள்ளி எடுத்த விபூதி, வழவழப்பான சாம்பல், சீமைச் சுண்ணும்புத் தூள் - துணி - குச்சி :

எண்ணெய் ஊற்ற ஏற்பாடுகள். புனல், வேம்பா – எரியவிடுவதற்கு காற்று இன்றியமையாதது :

காற்றுப்போக விளக்குகளில் ஏற்பாடு - புகை இல்லாமல் துடைப்பது. திரியைச் சுத்தமாய்க் கத்தரித்து வைப்பது: காற்று துவாரங்கள் அடைபடாமல் துடைப்பது முதலியன :

12. விளக்குகள் : கண்காட்சி: விளக்குப்பாட்டு ; விடுகவிகள் :

## விளக்குப் பாட்டு

ஏழு எட்டு வருஷங்களுக்குமுன்பு எனது வகுப்பில் படித்துவந்த ஒரு குழந்தை வெள்ளிக்கிழமை தோறும் குத்துவிளக்கு ஏற்றிவைத்து தீபத்தைக் குறித்து ஒரு பாட்டு பாடிவந்ததை தற்சமயம் எனக்கு அன்புடன் எழுதித்தந்தனள். அது பின்வருமாறு:—

விளக்கே திருவே வேதனுட நற்பிறப்பே
ஜோதிவிளக்கே ஸ்ரீதேவி பெண்மணியே
அந்தவிளக்கே அலங்காரப் பெண்மணியே
காந்தவிளக்கே காமாக்ஷி தேவியாரே.
பசும்பொன் விளக்குவைத்து பஞ்சுத்திரி போட்டு
குளம்போல் நெய்விட்டுக் கோலமுடன் ஏற்றிவிட்டேன்
பொட்டுமிட்டேன் குங்குமத்தால் பூமாலை சூட்டிவிட்டேன்
ஏற்றினேன் நெய்விளக்கு எந்தன் குடிவிளங்க
வைத்தேன் திருவிளக்கு மாளிகையும் தான்விளங்க
மாளிகையில் ஜோதியுள்ள மாதாவைக்கண்டு கந்தேன்
மங்கலியப்பிச்சை மடிப்பிச்சை தாருமம்மா
பெட்டி நிறையப் பூஷணங்கள் தாருமம்மா
கொட்டில் நிறையப் பசுமாடு தாருமம்மா
புகழ் உடம்பைத்தந்து எந்தன் பக்கத்தில் நில்லுமம்மா.
சேவித் தெழுந்து நின்றேன் தேவி வடிவு கண்டேன்
வயிரக்கிரீடம் கண்டேன் வைடூரிய மேனி கண்டேன்
முத்துக் கொண்டை கண்டேன் முழுப் பச்சைமாலை கண்டேன்
சாவரிமுடி கண்டேன் தாழைமடல் சூடக் கண்டேன்
பின்னலழகு கண்டேன் பிறைபோல் நெற்றி கண்டேன்
சாந்திடும் நெற்றி கண்டேன் தாயார் வடிவு கண்டேன்
குறிக்கிடும் நெற்றி கண்டேன் கோவைகனிவாயுங் கண்டேன்
செந்தாமரைப் பூபோல செவியிரண்டு கண்டேன்.
மார்பில் பதக்கமின்ன மாலைஅணிய கண்டுகந்தேன்
மங்கள நாயகியே உன்னை அடைந்த எந்தனுக்கு
வந்தவினையகற்றி மாபாக்கியத்தை தந்தருள்வாய் வாணீ.

## IV

**நெருப்பு, விளக்கு சம்பந்தமான விடுகவிகள்.**

1. இரண்டு கல்லைப்போட்டு உடைத்தாரே என் முன்னோர் எதற்காக,
சிவப்புப் பொட்டிட்ட குச்சியைக் கிழித்தாரே என் பாட்டனார் [எதற்காக,

நாற்பது குச்சியைப் பாங்குடன் அமைத்திட்ட
பெட்டியை வாங்கினாரே என் தகப்பனார் எதற்காக,
ஒரு பொத்தானை அழுத்த உதயமாயிற்றே சூரியனும் அதற்காகவே [தான்.

2. செக்கில் ஆட்டி யெடுக்கும் நல்லெண்ணெய் அல்ல
கொட்டையைக் காய்ச்சி எடுக்கும் ஆமணக்கும் அல்ல
திருவிளக்கு ஏற்றிவைக்கும் இலுப்பையுமல்ல
ஜாடிக்கு வாராது புட்டியில் வரும்
ஊற்று தோண்டிவரும் எண்ணெய், அது என்ன?

3. கையிலெடுத்துச் செல்லும் எலெக்டிரிக் அல்ல,
உயரத்தொங்கவிடும் டிட்மார் அல்ல
மேஜைவைக்கும் குத்துவிளக்கு அல்ல
காற்றிலும் கடிந்து செல்லும் அஞ்சாமல் மழையிலும் செல்லும்
நாட்டுப் புறத்தானும் நகரத்தானும் தேடிச்செல்வது இதுவே.

4. குச்சி நுனியில் இருக்கும் மாத்திரை
பெட்டியிலிருக்கும் குச்சி மாத்திரை
மாத்திரையை மருந்தில் தேய்க்க
நெருப்பு கொடுத்திடும் மாத்திரை அது என்ன?

5. முக்கண்ணன் சிவனேயல்ல கட்டைகளையே தின்பான்
தனித்தனியாய் இருந்ததெல்லாம் ஒன்றாய்க் கூட்டிவைக்கும் [உத்தமன் இவனே.

6. பூர்ண சுந்திரன் போன்றிருக்கும்
தட்டிக் கொட்டுவார் கைநின்று கூத்தாடும்
முக்கண்ணன் வாயிலில் நின்று சிரிக்கும்
தட்டிச் சுட்டது நெற்றிக்கு நீறாகும் நிலத்திற்கு எருவாகும் அது [என்ன?

7. அடுப்பு எரியவிட உதவும் வரட்டி அல்ல
ஊதுகுழாய் கொண்டு ஊதத் தேவையில்லை
கானலில் காற்று கொடுக்கும் கைப்பிடியுமுண்டு
கடுங் கோடைக்குக் கொடுத்துதவும் தானம் இதுவாகும் அது
என்ன?

# தஞ்சாவூர் ஜில்லா போர்டு ஆரம்ப ஆசிரியர் மகாநாடு

23—2—1941

## தஞ்சாவூர் ஜில்லா கல்வி அதிகாரி மகாநாட்டைத் திறந்துவைத்தபோது செய்த பிரசங்கம்

ஆரம்பக் கல்வியின் சரித்திரத்தில் முதல் முதல் இந்த ஜில்லாவில் ஜில்லா போர்டு ஆசிரியர்களின் முதல் மகாநாட்டை நீங்கள் கூட்டிவிட்டீர்கள். இந்த ஜில்லாவிலுள்ள ஆரம்ப ஆசிரியர்களின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்ட மகாநாட்டிற்கு வந்து அதைத் திறந்து வைப்பது எனக்கு மிகவும் சந்தோஷத்தை அளிக்கிறது.

எல்லாவற்றையும்விட முக்கியமான விஷயம் ஒன்று நான் சொல்ல வேண்டியிருக்கிறது. இந்த மகாநாட்டில் நீங்கள் ஏராளமாகக் கூடி இருக்கிறீர்கள். இதன் முக்கிய நோக்கம், சிறுவர்களுக்குக் கல்வி போதிக்கும் விஷயத்தில் நமது முறைகளை சீர்ப்படுத்திக் கொள்வதே யாகும். ஆகையால் இந்த மகாநாடு ஒரு முக்கியமானது என்று நான் சொல்லுவேன்.

இப்படிப்பட்ட மகாநாட்டின் பிரயோஜனத்தைப்பற்றி நான் கூறவேண்டியதில்லை. மாகாணக் கல்வி அதிகாரி கல்வியைப் பரவச் செய்வதில் மிகவும் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார். அவருக்கு நாம் நன்றி பாராட்டவேண்டும். ஆசிரியர்கள் ஒன்று சேரவும், அவரவர்களுடைய அபிப்பிராயங்களையும் சங்கடங்களையும் விவாதித்துத் தீர்மானிக்கவும், ஆசிரியர்களின் வேலையை நடத்துவதற்கு வேண்டிய முறைகளை ஏற்படுத்தவும், பொது ஜனங்களுக்கு சிரத்தையை ஊட்டவும் இது ஒரு அரிய சந்தர்ப்பமாகும்.

ஆரம்பக் கல்வியின் விஷயங்கள் எவ்விடத்திலும் ஒரே மாதிரியாக இருந்தபோதிலும், மற்ற இடங்களில் வேலை செய்யும் உங்கள் சிநேகிதர்களைவிட நீங்கள் அதிக சௌகரியங்களை பெற்றிருக்கிறீர்கள். உங்களுடைய உத்தியோக ஸ்திரத்தையும், ஒழுங்காகக் கொடுக்கப்படும் சம்பளத்தையும், சுயேச்சையையும் பற்றி நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை.

பிரைவேட் பாடசாலைகளில், முதல் வகுப்பில் இருக்கும் பையன்களைவிட நாலாவது அல்லது ஐந்தாவது வகுப்பில் இருபத்தைந்து சதவீதம் குறைவாயிருந்தால் கிராண்டு தொகையில் வெட்டு ஏற்படுகிறது.

மேலும் சராசரியில் பள்ளிக்கூடம் செல்லும் மாணவர்கள் இருபதுக்குக் குறைவாயிருந்தால் கிராண்டே கிடையாது. ஜில்லாபோர்டு ஆதரவில் உள்ள பள்ளிக்கூடங்களில் அவ்வித நிபந்தனைகள் கிடையாது. போர்டு பாடசாலைகளில் நாலாவது ஐந்தாவது வகுப்புகளில் பிள்ளைகள் மிகவும் குறைவாயிருப்பது கவனிக்கத் தக்கது. இந்த ஜில்லாவில் 168 போர்டு பாடசாலைகளில் வேண்டிய அளவு பிள்ளைகளில்லை. போர்டு ஆதரவி லுள்ள ஆசிரியர்களுக்கு உத்தியோகம் ஸ்திரமாயிருக்கிறது; சம்பளம் ஒழுங்காகக் கொடுக்கப்படுகிறது; ஆகையால் நீங்கள் பொறுப்புடன் வேலை செய்து வகுப்புகளில் பிள்ளைகள் குறையாமலிருக்கும்படியும், பள்ளிக்கூடங்களுக்கு வரும் மாணவர்கள் அதிகரிக்கும்படியும் செய்ய வேண்டும். போர்டு ஆசிரியர்களுடைய கஷ்டங்களையும், சங்கடங்களை யும் நான் அறியவில்லை என்று நீங்கள் எண்ணக்கூடாது. ஆசிரியர்களை இடம்விட்டு மாற்றுவதும், வேலையிலிருந்து ஒதுக்கி வைப்பதும், சில சந்தர்ப்பங்களில் நீக்கி விடுவதும் சாதாரணமான விஷயம். இவை கல்வியின் அபிவிருத்துக்கு இடையூறுகளே, ஓயாது ஆசிரியர்களை மாற்றுவது ஆசிரியர்களுடைய நன்மைக்காவது அல்லது மாணவர் களுடைய நன்மைக்காவது ஏற்றதல்ல என்று போர்டு பிரசிடெண்டுக்கு எழுதியிருக்கிறேன். நேரிலும் சொல்லப்போகிறேன்.

பெண் கல்வின் அவசியத்தைப்பற்றிப் பேசுவது மிகையாகாது. ஏராளமான பெண்கள் எழுதப்படிக்கத் தெரியாமலிருக்கும்பொழுது, பையன்களுக்கு மட்டும் ஆரம்பக் கல்வியை அளித்தோமானால் சமூகத் துக்கு நலம் உண்டாகாது. படித்த மனிதர்களும் படிக்காத ஸ்திரீகளும் எவ்வாறு சேர்ந்து வாழ்வது? நம் தேசத்தில் குடும்ப வாழ்க்கை கலைந்து போவதற்குக் காரணம் இவ்விதம் ஒரு தலைப்பட்ட கல்வி அபி விருத்தியே. அது அனேக குடும்பங்களில், கணவன் மனவிகளுக்குள் ளும், தாய் தகப்பன்களுக்குள்ளும் மிகக் கெடுதல்களை உண்டுபண்ணி இருக்கிறது. நாம் பிள்ளைகளுக்குமட்டும் கல்வி அளிப்பது போதாது. பெண்களுக்கும் படிப்பு வேண்டும் என்ற உணர்ச்சியை நாட்டில் உண் டாக்க வேண்டும்.

இக்காலத்தில் இந்தியாவில் ஏற்பட்டுள்ள சமூக, ராஜீய, நிலை மையை நோக்குங்கால் நம்முடைய பெண் குழந்தைகளைப் படிப்பிக்க வேண்டுமென்று தோன்றுகிறது. ஒழுங்கான நிலைமையை இந்தியா அடையவேண்டுமானால் பெண் குழந்தைகளின் படிப்பு மிகவும் முக்கியம். தன் அதிகார தசைக்குள்ளாக பையன்களின் படிப்பு அளவிற்கு பெண் களின் படிப்பைக் கொண்டுவரவேண்டிய முயற்சியைச் செய்யப்போவ தாக மாகாணக் கல்வி அதிகாரி கூறி இருக்கிறார். சென்ற மூன்று வரு ஷங்களாக பெண் கல்வியை விஸ்தாரப்படுத்தவும், அபிவிருத்தி செய்ய வும் வேண்டிய தனி முயற்சி செய்து வருகிறார். அவருடைய முயற்சி யின் பயனை எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் அதிகப் பெண்கள் சேர்க் கப்படுவதிலிருந்து தெரிந்துகொள்ளலாம். இம்மாகாணத்தில் ஆரம்பக்

கல்வியின் வளர்ச்சி பையன்கள் பாடசாலையிலும், பெண்கள் பாடசாலையிலும் அதிகமாகப் பெண்கள் சேருவதைப் பொறுத்திருக்கிறது. பெண் கல்வியின் அபிவிருத்திக்கு இது ஒரு அத்தாட்சியாகும். இந்த ஜில்லாவைப் பற்றிய மட்டில் பள்ளிக்கூடம் போகக்கூடிய வயதுள்ள பெண்களில் 87 சதவீதம் பள்ளிக்கூடம் போகிறதில்லை. பையன்கள் கல்வியும், பெண்கள் கல்வியும் ஒரளவாயில்லை. பெண்கள் படிப்பில்லாமலிருப்பதை ஓர் அவமானகரமாக யாரும் நினைக்கிறதில்லை. தன் பெண்ணைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பாத தாயார் தன் பெண்ணுக்கு மட்டுமல்லாமல் தேசத்திற்கே துரோகி ஆகிறுள். இப்படிப்பட்ட உணர்ச்சி பொது ஜனங்களின் மனதில் எழும்புகிறவரையில் பையன்களின் படிப்பை ஒத்து பெண் கல்வி விருத்தியடையாது. தளர்ச்சியில்லா ஒத்துழைப்பும், விடாத்தூண்டுதலுமே பெண் கல்வியின் நோக்கத்தைக் குறித்து ஜனங்களின் மனதில் ஒரு மாறுதலை உண்டாக்கும். பெண் கல்வியைப் பரவச் செய்வதில் இந்த ஜில்லாவிலுள்ள ஸ்திரீ சங்கங்களின் ஒத்துழைப்பைக் கேட்டு கடிதம் எழுதி இருக்கிறேன்.

*　　*　　*　　*

இந்த ஜில்லாவில் ஆரம்பக் கல்வியின் அபிவிருத்தியைக் காண்பிப்பது பள்ளிக்கூடங்களில் பையன்களின் அதிகமான சேர்க்கையேயாகும். சென்ற வருஷத்திற்கு முந்திய வருஷம் நான் ராமனுதபுரம் கல்வி சபையின் கல்வி யதிகாரியாக இருந்தபொழுது ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் குழந்தைகளைச் சேர்க்கும் முறையில் ஒரு புதிய ஏற்பாட்டைப் பரிசோதனை செய்து பார்த்தேன். அதன் பலனுக ராமனுதபுரம் ஜில்லாவில் அநேக மாணவர்கள் பள்ளிக்கூடங்களில் சேர்க்கப்பட்டிருக்கிறுள். நான் அந்த ஜில்லாவிலிருந்து இந்த ஜில்லாவுக்கு மாற்றப்பட்டேன். இங்கும் அதே புது முறையை கையாண்டு வருகிறேன்.

இந்த ஜில்லாவில் ஆரம்பக் கல்வி உன்னத ஸ்திதியை அடைய வேண்டுமானுல், பெற்றோருடைய உதவியும் ஆசிரியருடைய ஒத்துழைப்பும் மிகவும் அவசியமானவை. கல்வியின் நோக்கம் உணர்ந்தால்தான் பெற்றோர்கள் ஒத்துழைப்பார்கள். இந்த முக்கிய நோக்கத்தை கொண்டு தான் இந்த ஜில்லாவில் 24—6—40-ல் "ஒபன் டே" **(Open Day)** கொண்டாட்டம் என்பது என்னுல் ஏற்படுத்தப்பட்டது. நிரந்தரமான எழுத்தறிவு ஏற்படும்பொருட்டு குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி, குறைந்தது ஐந்தாம் வகுப்பு முடியும்வரையிலாவது விடாமல் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிவைக்கும்படி இந்த ஜில்லாவிலுள்ள ஆரம்ப பாடசாலையைச் சேர்ந்த பெற்றோர்களுக் கெல்லாம் நான் எழுதியிருக்கிறேன். இப் புதிய முறையினுல் ஏற்பட்ட பலன்கள்:—

1. 24—6—40-க்குப் பிறகு இந்த ஜில்லாவில் ஆரம்ப பாடசாலைகளில் 12,000 குழந்தைகளுக்கு மேல் சேர்ந்திருக்கிறுர்கள்.

2. அநேக பள்ளிக்கூடங்களில் பெற்றோர் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பெற்றோர்களும் பள்ளிக்கூடங்கள் தங்களுடைய

தாகக் கருத ஆரம்பித்திருக்கிறார்கள். கல்வி அபிவிருத்திக்கு அவர்கள் உதவி செய்யவேண்டுமாயின் தங்களுடைய குழந்தைகளை ஐந்தாவது வகுப்பு முடியும்வரையில் பள்ளிக்கூடத்திற்கு விடாது அனுப்ப வேண்டும்.

3. ஆரம்பக் கல்வியின் வளர்ச்சிக்கு முக்கியமாக கல்வி இலாகா பெற்றோர்கள், பொது ஜனங்கள் ஒன்று சேர்ந்து "ஓபன் டே" (Open day) கொண்டாடப்பட்டது மிகவும் திருப்திகரமாக இருந்தது.

இவ்விஷயங்களை எண்ணிப் பார்த்தால், இந்த ஜில்லாவில் புது முறை மிகவும் வெற்றிகரமாக இருக்கிறது என்று நான் அழுத்தமாகக் கூறுவேன். பெற்றோர்களின் மனதிலும் ஒரு பெரிய எழுச்சி ஏற்பட்டிருக்கிறது.

நீங்கள் செய்யவேண்டிய வேலையை உத்தேசித்து உங்கள் மனோ விஷயங்களைச் சீர்படுத்திக்கொள்ளவேண்டியது அவசியம். நீங்கள் பயிற்சி பெற்ற உபாத்தியாயர்களாயிருந்தபோதிலும் வாழ்க்கையின் பொருட்டு பயிற்சி அளிக்கப்பட்டவர்களாகக் கருதக்கூடாது. இவ்வுலகில் உங்களுக்கு அதிசயத்தை அளிக்கக்கூடிய அனேக விஷயங்கள் இருக்கின்றன. உங்கள் படிப்பு முடிந்து விட்டதாக நினைப்பதற்கில்லை. இப்பொழுதுதான் ஆரம்பமாகி இருக்கிறது. உங்கள் படிப்பை மேலும் அபிவிருத்திசெய்யக் கருதவேண்டும். முடிந்து விட்டதாகவும், ஒரு வரைக்குள் அகப்பட்டதாகவும், புனராலோசனைக்குரியாததாகவும் நீங்கள் எண்ணக்கூடாது. அறிவென்பது முடிவடையாது வளர்ந்து கொண்டே போகும் விஷயமாகும். கற்பதில் இப்படிப்பட்ட தன்மைதான் உங்களுக்கு இருக்கவேண்டும். இது சம்பந்தமாக ஒரு முக்கிய விதியைக் கவனிக்கவேண்டும். அதாவது, ஒரு உபாத்தியாயர், தான் கற்றுக்கொண்டே இருந்தாலொழிய மற்றவர்களுக்குப் போதிக்க முடியாது. ஒரு விளக்கு, தான் எரிந்து கொண்டே இருந்தாலொழிய, மற்றொரு விளக்கை ஏற்றமுடியாது.

முற்றிலும் கற்றுவிட்டதாக நினைக்கும் ஆசிரியரும், விஷயங்களின் அவ்வப்போது ஏற்படும் மாறுதல்களைப்பற்றித் தெரிந்துகொள்ளாத ஆசிரியரும் மாணவர்களின் மனதில் பெரும்பாரத்தை வைப்பவர்களாவார்கள். அவ்வாசிரியர் மாணவர்களை துரிதப்படுத்தவாவது, உணர்ச்சி பெறும்படி தூண்டவாவது முடியாது.

ஒரு ஆசிரியர் கிராமத்தில் பிரகாசிக்கும் விளக்குக்கு ஒப்பாவார். ஒரு விளக்கு அதைச் சுற்றிலும் ஒளியை வீசவேண்டுமானால் அந்த விளக்கைத் துடைத்துப் பிரகாசமாக வைக்கவேண்டும். மறுபொருளில், ஆசிரியரின் தளவாடங்களுக்கு விடாப்பயிற்சி என்பது ஒரு முக்கிய பாகமாக இருக்கவேண்டும். உயர்தர பாடசாலை ஆசிரியரைவிட ஆரம்ப பாடசாலை ஆசிரியர் அதிகமாகக் கவனிக்கப்படவேண்டும்; ஏனென்றால் அவர் அறிவை வளர்க்கக்கூடிய வசதிகளில்லாமல் தனிமையாக வேலை செய்கிறார். கிராமத்திலிருந்து அறிவு வளர்ச்சிக்கு வேண்டிய உதவி மிகவும் சொல்பமே. அவர் மனச்சோர்வு அடைகிறார், குடிசை


யில் வேலை செய்கிறார், சோம்பலை அடைகிறார், தாழ்ந்த ஜனங்களைக் கண்டுவிட்டால் இருக்கும் கொஞ்ச உத்ஸாகத்தையும் இழந்து விடுகிறார்.

எப்பொழுதும் என்னுடைய நோக்கம் என்னவென்றால், உயர்ந்த படிப்பு இருக்கவேண்டுமானால் நல்ல உபாத்தியாயர்கள் இருக்கவேண்டும். பள்ளிக்கூடத்திற்காக நல்ல கட்டடம் கட்டலாம்; அதற்கு வேண்டிய சௌகரியங்களைக் கொடுக்கலாம்; நல்ல சுற்றுப்புறங்கள் உள்ள இடம் கிடைக்கலாம்; அதற்கு வேண்டிய தர்மங்கள் நடத்தலாம்; ஆனால், எல்லாவற்றையும்விட வெற்றியோ தோல்வியோ ஆசிரியரைப் பொறுத்திருக்கிறதென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். சரீரத்திற்கு ஆத்மா எப்படியோ, அப்படி பாடசாலைக்கு உபாத்தியாயர் ஆவார். ஆசிரியரின் பலம் மாணவர்களின் தொகையைப் பொறுத்தது. உண்மையான பாதிரிமாரைப்போல உபாத்தியாயர் தன் வேலையில் கவனம் வைத்தால் அந்தப் பாடசாலை அதிக பலமுள்ளதாயும், அதிக மாணவர்களுள்ளதாயும், அதிக கீர்த்தியுடையதாயும் ஆய்விடும். அப்படி இல்லாமல் ரூபாய் அணா பைசாவில் கவனத்தைச் செலுத்தினால் அவருக்குச் சம்பளம் ஒழுங்காக வந்தபோதிலும் பள்ளிகூடத்திற்குப் பிள்ளைகள் ஒழுங்காக வரமாட்டார்கள். இன்று நான் அழுத்தமாககூறவிரும்பும் முக்கியவிஷயம் என்னவென்றால், காலக்கிரமத்தில் கல்வி அபிவிருத்தி ஆசிரியரையே பொருத்து இருக்கின்றது என்பதுதான். பள்ளிக்கூடத்தைப் பொருத்த பிரச்னைகள் ஆசிரியரைப் பொருத்ததாகும். ஆகையால் நான் வற்புறுத்துவதென்னவென்றால், உங்களுடைய உத்தியோகத்தில் வெற்றியடைய வேண்டுமானால் நீங்கள் எப்பொழுதும் கல்வி முறையில் ஏற்படும் மாறுதல்களுக்குத் தகுந்தபடி நடந்துகொள்ள வேண்டியது அவசியம். நீங்கள் கற்ற விஷயங்களை மறக்காமலும் உங்கள் வாழ்நாட்களைக் கல்வி கற்பதிலேயே செலுத்திக்கொண்டு வந்தால் உங்கள் மாணுக்கர்கள் கல்வி கற்பதிலும் வேலை செய்வதிலும் உள்ள சாராம்சத்தைக் கொஞ்சமாவது கிரஹித்துக்கொள்ள முடியும். உண்மை விஷயத்தில் உங்களுடைய பக்தி முழுமனத்துடன் இருந்தால் உங்கள் மாணவர்கள் அந்த பக்தியைக் கிரஹித்துக்கொள்ளக் கூடும். உயர்ந்த விஷயங்களிலும் ஆசரணைகளிலும் நீங்கள் அதிக உணர்ச்சிகாட்டினாலும், மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஈடுபட்டிருப்பீர்களானாலும், உங்கள் மாணவர்கள் நீங்கள் அனுபவித்துக்காட்டும் விஷயங்களை தங்களையறியாமலேயே கிரஹித்துக்கொண்டு விடுவார்கள். நீங்கள் இன்னும் பெரிய கிராமங்களைக் கட்டுபவராவீர்கள். அக்ஞானத்தையும் எழுத்தறிவின்மையையும் எதிர்த்து நிற்கும் யுத்தவீரர்கள் நீங்கள்தான். இந்த, அக்ஞானத்தையும் எழுத்தறிவின்மையையும் போக்கடிக்கவேண்டிய பெரிய சண்டையில் அரைமனதான முயற்சி உதவாது. சரியானபடி தயாரிக்கப்படாதவும், சரியான தளவாடங்களில்லாதவுமான யுத்த வீரர்களை சண்டைக்கு நடத்திக்கொண்டுபோகும் ஒரு தளகர்த்தரை மனதில் நினைத்துப்பாருங்கள். அவர் அவர்களைத் தோல்வி அடையும்

படி செய்துவிடுவார். மக்களுடைய அக்ஞானத்தைப் போக்கடிக்கிற பெரியகாரியத்தில் வெற்றிபெறவேண்டுமானால் நீங்கள் சரியான சாதனங்களோடு வேலை செய்யவேண்டும். இல்லாவிட்டால் இக்காரியத்தில் தோல்வியடைவது நிச்சயம்.

ஆசிரியர்களுக்கு வேண்டிய சௌகரியங்களை சீர்படுத்தவேண்டிய வேலையில் கல்வி டிபார்ட்மெண்டு முழுமனது செலுத்துகிறது என்று நான் சந்தோஷத்துடன் கூறமுடியும். புதிய பாட திட்டத்தின்படி பாடங்களைப் போதிக்கவும், அவர்களுடைய சுற்றுப்புற அறிவை மறக்காமலிருக்கச் செய்யவும், ஆசிரியர்களைத் தயாரிக்கும் நோக்கத்துடன் புனர்விமர்சனைத் திட்டங்கள் (Refresher Courses) ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இத்திட்டங்களைத் தவிர, சிலபசிலுள்ள பாடங்களில் ஒன்று அல்லது இரண்டைப் போதிக்குமாறு சில சென்டர்களில் புனர்விமர்சனைத் திட்டத்தை ஆசிரிய சங்கங்கள் ஏற்படுத்தி இருக்கின்றன. இதை பொதுஜனங்கள் ஒரு திருப்திகரமான விஷயமாகக் கருதவேண்டும். உங்களுடைய ஒத்துழைப்பையும் ஆதரவையும் கொண்டு இம்மாகாணத்தில், உருவாகவும் நிரந்தரமாகவுமுள்ள சீர்திருத்தங்களுக்கு வேண்டிய புதுக் கல்வி திட்டங்களைப் பலப்படுத்த முடியும் என்று நான் எண்ணுகிறேன். இப்பொழுதிருக்கும் மாகாணக் கல்வி யதிகாரியின்கீழ் இனி வரும் ஆசிரியர்கள், இம்மாகாணத்தில் படிப்பின்மை என்பது பழைய விஷயமாகவும், பெண்களில் படிப்பின்மை என்பது ஓர் அவமானகரமான விஷயமாகவும், ஒவ்வொரு ஜாதி, வகுப்புக்குழந்தைகளும் ஒற்றுமையாகவும், சண்டை சச்சரவின்றியும், தங்கள் சுற்று வட்டாரத்தைப்பற்றித் தெரிந்துகொண்டும், மனதுக்குத் திருப்தியை அளிப்பதில் அபிவிருத்தி உண்டாகும்படியும், செய்துவிடுவார்கள் என்பதில் எனக்குப் பூர்ண நம்பிக்கை உண்டு. காரியசித்தியில் உங்களைப்போல் நோக்கமுள்ள அநேக பெற்றோர்களையும் பிரமுகர்களையும் உதவிக்குச் சேர்த்துக் கொண்டு விடாமுயற்சியோடும் மேலே குறிப்பிட்ட நோக்கத்தோடும் நீங்கள் வேலை செய்தாலொழிய இந்தியாவிற்கு கதிமோக்ஷம் கிடையாது. ஆகையால் ஒவ்வொரு உபாத்தியாயரும் உபாத்தியாயினியும் அவரவர்களுடைய சுற்றுப்புறத்திலிருந்து படிப்பின்மையை நீக்கவேண்டிய சௌகரியங்களையும் தயாரித்துக்கொண்டு புறப்படுங்கள். இந்த ஜில்லாவிலுள்ள எல்லா பாகங்களுக்கும் முழுமனதுடன் ஊக்கத்துடன் செல்லுங்கள். படிப்பறிவில்லாத ஜனங்களுள்ள இந்த ஜில்லாவை படிப்புள்ளவர்களும் சந்தோஷகரமாகவும் செய்யவேண்டி நீங்கள் எல்லாரும் சேர்ந்து செய்யவேண்டிய முயற்சியில் ஒரு மணி நேரம்கூட காலதாமதம் செய்யக்கூடாது. மாகாணக் கல்வி அதிகாரி உபாத்தியாயர்களுக்கு அளித்திருக்கும் வேலையில் இந்த ஜில்லாவிலுள்ள ஆசிரியர்கள் ஊக்கத்தில் குறைவுள்ளவர்களாகவும், மற்ற ஜில்லாக்களுக்குப் பின் வாங்குபவர்களாகவும் இருக்கமாட்டார்கள் என்று பொது ஜனங்களுக்கு என் சார்பாகவும், இங்கு கூடியிருக்கும் ஆசிரியர்களின் சார்பாகவும் நான் உறுதி கூறுகிறேன்.

## சிறுவர் பகுதி



காகமும் நரியும்

(1)

ஒரு ஊர்

ஒரு மரம்

ஒரு காகா

(2)

ஒரு கடை

ஒரு குடை

ஒரு கூடை

ஒரு கூடை வடை

(3)

ஒரு காகா
ஒரு வடை
வாய் வடை

(4)

ஒரு நரி
ஒரு குள்ள நரி
நரிக்குப் பசி
நல்ல பசி

(5)

நீ நல்ல காகா
நீ அழகு காகா
நீ பாட்டு பாடு
நீ நல்ல பாட்டு பாடு

(6)

உன் ஊர் அழகு
உன் பேர் அழகு
உன் கண் அழகு
உன் வாய் அழகு

உன் பாட்டு அழகு
நீ பாட்டு பாடு

(7)

உன் உடம்பு அழகு
உன் சட்டை அழகு
உன் நடை அழகு
ஒரு பாட்டு பாடு

(8)

மரம் மேலே காகா
மரம் கீழே நரி

(9)

காகா கா—கா—கா...
வடை கீழே
நரி வாய் வடை

(10)

நரி ஓட்டம்
யார் அசடு?
காகா அசடு
யார் சமத்து?
நரி சமத்து

(11)

# கா கா
# கா கம்
# காக்கை

(12)

# ஒரு நரி காட்டு
# ஒரு மரம் காட்டு
# ஒரு வடை காட்டு
# ஒரு காகா காட்டு.

குறிப்பு:—சிறுவர் பகுதியில் எழுதப்படும் கதைகள் மூன்றும் வகுப்பிற்கு மேற்பட்ட குழந்தைகளாலே மாத்திரம் பெரும்பாலும் படிக்கப்பட்டு வரும். பாலர் வகுப்புக் குழந்தைகள் கூடப் படிக்கும் பொருட்டு வெகு எளிய நடையிலும் பெரிய எழுத்தில் நல்ல படங்களைக் கொண்டும் அவர்களுக்குத் தினசரி பழக்கத்திலுள்ள வார்த்தைகளைத் திரும்பத்திரும்ப உபயோகித்தும் கதைகளை எழுதி வெளிக்கொணர்வது அவசியம். மேலும் மேலும் படிக்க ஆசை உண்டுபண்ணுவதில் இப் புத்தகம் ஒரு சாதனம் ஆகும். இம்மாதிரி புத்தகம் அச்சில் இல்லாவிட்டாலும் கையெழுத்துப் புத்தகங்கள் தயார் செய்யக்கூடும். அதற்கு ஒரு சுலபமான வழி உண்டு. உதாரணமாக 5-ம் வகுப்புப பிள்ளைகள் இங்கு உள்ள கதையைத் தமது "காப்பி" நேரத்தில் 24 பக்கம் உள்ள ஒரு பிரத்தியேகமான நோட்புக் தைத்து அதில் எழுதினார்கள். தமது உபாத்தியாயர் கரும்பலகையில் எழுதினதைத்தான் பார்த்து எழுதினார்கள். தாங்களே சில பக்கங்களுக்கு எதிரில் சில சித்திரங்கள் வரைந்தார்கள். சிலர் கிடைக்கக்கூடிய பொருத்தமான படங்களைக் கத்தரித்து ஒட்டினார்கள். அட்டையை அலங்கரித்து கதையின் பெயரை ஒழுங்காக எழுதினார்கள். பிறகு ஒவ்வொருவரும் தாம் எழுதிய புத்தகத்தைப் பாலர் வகுப்புக் குழந்தைகளுக்குக் கொடுத்து உதவினார்கள். பாலர்கள் அதை சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டு படித்துக் களித்தார்கள். இம்மாதிரி கூட்டுறவு முறையிலும் முயற்சியிலும் இம்மாதிரி புஸ்தகங்கள் வெளிக்கொணர முடியும்.

S. ஜகந்நாதன்

# பள்ளிக்கூடத்தில் "கலையும் கைத்தொழிலும்"

By *R. M. Savur, Divisional Inspector of Schools, Coimbatore.*

ஒரு பாடத்தைப் போதிக்கும்போது ஒவ்வொரு உபாத்தியாயரும் 'என்ன நோக்கத்தைக் கொண்டு இதை போதிக்கின்றோம்' என்று தெளிவாக அறிவர். ஆனால் பள்ளிக்கூடங்களில் 'கைத்தொழில் வேலை' அல்லது 'கைவேலையில் பயிற்சி' என்ற பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்கள் அவ்வாறு தாம் போதிக்கும் பாடத்தைப்பற்றி அறிந்துள்ளார்கள் என்று கூறமுடியாது. ஒருகால் அவர்கள் பல நிபந்தனைகளுக்கு உட்பட்டு, மானேஜர்கள் சொல்லும் விதத்தில் பாடத்தைப் போதிக்க நேரிடலாம்; அல்லது வேலை அட்டவணைப் படி பயிற்சியை முடிக்கவேண்டும் என்று அவர்கள் நினைத்திருக்கலாம்; அல்லது கைத் தொழில் வேலைகளை பள்ளிக்கூடங்களில் போதிப்பதில் பயனில்லை என்று நினைத்திருக்கும் மானேஜர்களைத் திருப்தி செய்வதே முக்கியமாகக் கருதலாம். 'நான் கைவேலை என்ற பாடத்தில் சிறுவர்களுக்கு நன்மையுண்டாகும் என்று நம்பவில்லை; ஆனால் கல்வி இலாகா அதிகாரிகளைத் திருப்தி செய்யவே அப்பாடத்தை இந்தப் பள்ளிக்கூடத்தில் நடத்திவருகிறேன்' என்று ஒரு மானேஜர் வெளிப்படையாக என்னிடம் சொன்னார்.

இங்கிலாந்தில் கல்வி இலாகா உபாத்தியாயர்களுக்கென கைப் புத்தகம் ஒன்று வெளியிட்டுள்ளார்கள். அப்புத்தகத்தில் சில வருஷங்களுக்கு முன் '**சித்திரம்**', '**கைவேலை**' என்று தனித்தனி அத்தியாயங்கள் காணப்பட்டன. இப்போது வெளிவந்துள்ள புதிய பதிப்பில் இரண்டு அத்தியாயங்களும் ஒன்றுபட்டு '**கலையும் கைத்தொழிலும்**' என்ற தலைப்புடன் காணப்படுகின்றது. அவ்வாறு தலைப்பு மாற்றியதற்குக் காரணம் என்னவென்றால் கலைதான் எல்லாவித கைவேலைகளுக்கும் அடிப்படை என்று தெரியப்படுத்துவதே. உருவ அமைப்பு சித்திரத்தில் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு கைவேலைகளிலும் முக்கியம்தான். அளவு, ஐக்கியம் எடுப்பு ரூபம் முதலிய விசேஷ குணங்கள் சித்திரக்கலைகளில் அமைவதுபோல, மரவேலை, உலோகவேலை முதலிய கைவேலைகளிலும் அமைவது அவசியம்.

*  *  *  *

கலைஞன் எதைக்கொண்டு வேலை செய்தாலும் உருவ அமைப்பை சிருஷ்டித்து பார்ப்பவர் மனதை ரமிக்கச் செய்கிறான். அதுபோல கைவேலை செய்பவனும் தான் செய்யும் சாமன்களுக்கு அழகிய உருவத்தைத் தந்து மனதிற்கு சந்தோஷத்தைக் கொடுக்கிறான். அனுபவம், பொருள், முதலியவைகளை யொட்டியே கலைஞனும் கைவேலை செய்பவனும் கவர்ச்சிகொண்ட உருவத்துடன் உபயோகமுள்ள பொருள்களை சிருஷ்டிக்கின்றனர். இவ்விதமாக கலையிலும், கைவேலையிலும் உருவ அமைப்பு அடிப்படையாகத் திகழ்கின்றது.

*  *  *  *

ஆகையால் உபாத்தியாயர்கள் கைவேலைப் பாடத்தைக் கற்பிக்கும்போது உருவ அமைப்பின் அவசியத்தை உணர்ந்து, சிறுவர்கள் வடிவமும் சித்திரமும் கலந்த அழகிய உருவங்களைத் திறமையுடன் செய்யப் பழக்கவேண்டும்.

நமது பள்ளிக்கூடங்களில், கைத்தொழில்வேலை வகுப்பில் சிறுவர்கள் மரத்தினால் 'ரூலர்கள்' செய்கின்றனர் அல்லவா? அவைகள் பார்ப்பதற்கு அழகாக இருக்கின்றனவா? அல்லது பயன்படக் கூடியவைகளா? இவைகளைப்போன்ற சாமான்களைச் செய்வதனால் சிறுவர்களுக்கு எவ்வாறு மனமகிழ்ச்சியுண்டாகக்கூடும். சில பள்ளிக்கூடங்களில் 'நெசவு'த்தொழில் கற்பிக்கப் படுகின்றது. அதைப்பார்த்தால் 'ரூலர்கள்' செய்வதே உத்தமம் என்று கூடத்தோன்றுகிறது. ஏனென்றால் பெரிய தறியொன்றில் சிறுவர்கள் மாறி மாறி வெள்ளைத் துணியை நெசவு செய்கின்றனர். இதில் அளவு, ஐக்கியம், எடுப்பு, ரூபம் முதலிய எழில்கள் எப்படி காணப்படும்? எந்த பாகத்தை எவன் நெய்தான் என்று தெரியும்? சிறுவர்கள் தாம்செய்த பொருள் எதுவென்று அறியாமல் இருக்கும்போது, அதன் மூலமாக எப்படி சந்தோஷமடைய முடியும்?

பள்ளிக்கூடத்தில் கைவேலை நடக்கும் விதத்தைப் பாருங்கள். வேலைத்திட்டம் போடுவது ஒருவர்; செய்யப்படும் பொருள் சிறுவர்களுக்கு உபயோகமில்லை; பல சிறுவர்கள் விட்டுவிட்டு வேலைசெய்து சாமான் பூர்த்தியாகிறது. இதைக்கண்டு எந்த சிறுவன் மனமகிழ்ச்சி கொள்ளுவான்? ஆகையால் 'கலையும் கைவேலையும்' என்ற பாடத்தை பள்ளிக்கூடங்களின் போதிப்பதின் நோக்கத்தையே நாம் மாற்றிக் கொள்ளவேண்டியது அவசியமாகிறது.

'**கலையும் கைத்தொழிலும்**' என்ற பாடத்தைப்பற்றி கொடுக்கப்பட்ட விவரங்களில் பின்வரும் நோக்கங்கள் கைப்புத்தகத்தில் காணப்படுகின்றன:

(1) சிறுவர்கள் தங்கள் மனோபாவத்திற்கு ஒத்த உருவங்களை தைரியமாகவும், உண்மையாகவும் அழகாகவும் செய்யத் தேர்ச்சிபெற வேண்டும்.

(2) இயற்கை சிருஷ்டியில் காணப்படும் அழகையும், யோக்கியமான கைத்தொழில் பொருள்களின் மேன்மையையும் சிறுவர்கள் அறிந்து அனுபவிக்கும் ஆற்றல் பெறவேண்டும். பள்ளிக்கூடங்களில் மற்ற பாடங்களை எவ்வாறு படிப்படியாக பாலர் வகுப்பிலிருந்து உயர்ந்த வகுப்பு வரையில் போதித்து வருகின்றார்களோ, அவ்வாறே 'கலையும் கைத்தொழிலும்' என்ற பாடத்தையும் போதிக்கவேண்டும். சரியான பாடதிட்டத்தை அமைத்துக்கொண்டு படிப்படியாக பலவித திறமைகள் பெறுமாறு சிறுவர்களுக்கு பயிற்சி கொடுக்கவேண்டும். நாளடைவில் சிறுவர்கள் அழகான உருவ அமைப்பையுடைய பொருள்களைத் திறமையுடன் செய்யக்கூடிய சக்தி பெறுதலே முக்கிய நோக்கம். (தொடரும்)

# செய்தி திரட்டு

## (1) செய்யார் தாலூகா, ஜில்லாபோர்டு ஆரம்ப ஆசிரியர் சங்கம், கோவிலூர்

9-3-'41-ல் இச்சங்கத்தலைவரின் அக்ராசனத்தின் கீழ் இச்சங்கம் கூடியது. 32 மெம்பர்கள் ஆஜரானார்கள்.

கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன :—

1. வடஆற்காடு ஜில்லாபோர்டு ஆரம்ப ஆசிரியர்களின் குழந்தைகள் ஜில்லாபோர்டு உயர்தர பாடசாலையில் (High School) இலவசமாகப் படிக்க ஜில்லாபோர்ட்டார் அனுமதிக்க வேண்டும்.

2. ஆரம்ப பாடசாலைகளில் வேலைநாட்களை 220 லிருந்து 200 ஆக மாற்றும்படி கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

3. ஆசிரியர்களின் சௌகரியத்திற்காகவும், குழந்தைகளின் சௌகரியத்திற்காகவும், அநேக பொதுஸ்தாபனங்களில் செய்திருக்கிறபடி சனிக்கிழமைகளை இச்சில்லாபோர்ட்டும் விடுமுறை நாளாக உத்திரவு செய்யவேண்டும்.

4. பிராவிடெண்டு பண்டு ரூல், பண்டமெண்டல் ரூல் முதலிய புஸ்தகங்களை எல்லாப் பாடசாலைகளுக்கும் சப்ளை செய்யவேண்டும்.

5. இந்த ஜில்லாபோர்டு ஆரம்ப ஆசிரியர்களை எல்லாம் ஒரே வகுப்பாக வகுத்து, சம்பள ஸ்கேல்விகிதம் ஏற்படுத்தி ஒவ்வொருவருடைய ஸர்விஸ்படி சம்பள உயர்வு அளிக்கும்படி ஜில்லாபோர்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

6. ஆசிரியர்களின் லீவ் மனுக்களுக்கு ஜில்லாபோர்டு செலவிலேயே உத்தரவு அனுப்பவேண்டும்.

7. கல்வி அதிகாரிகளின் உத்திரவுப்படி கோடை லீவு நீங்கலாக ஏப்ரல் முதல் ஜூன் முடிய போர்டு பாடசாலைகள் காலை 7-30 மணி முதல் 11-30 மணிவரை (4 மணி) வேலை செய்ய உத்திரவு போடவேண்டும்.

8. ஒரு ஊரிலிருந்து மற்றோரு ஊருக்கு மாற்றப்படும் உபாத்தியாயருக்கு பிரயாணப்படி கொடுக்கவேண்டும்.

9. 1941-42-க்கு நிர்வாகஸ்தர்களைத் தீர்மானித்தது.

10. 15-3-'41-ல் சோளங்கிபுரத்தில் நடக்கும் ஜில்லா ஆசிரியர் மகாநாட்டிற்கு இரண்டு பிரதிநிதிகளை தீர்மானித்தது. (1. V. N. மணி அய்யர். 2. I. V. சீதாராமய்யர்.)

---

## (2) திருச்செந்தூர் தாலூகா ஆரம்பபாடசாலை மானேஜர்கள் சங்கம்

5-3-'41-ல் பிரகாபுரம் R. C. பாடசாலையில் நடைபெற்றது. அவ்வமயம் அடியில்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :—

1. முன்கூட்டத்தில் அனுப்பிய தீர்மானங்கள்பேரில் கல்வி அதிகாரிகள் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைப்பற்றி தகவல் அறிய வேண்டும்.

2. 1-ம் வகுப்பில் மாணவர்கள் வருஷம் இருமுறை மட்டுமின்றி மற்ற மாதங்களிலும் சேர்க்க அனுமதியளிக்கவேண்டும்.

3. டைரக்டர்துரை இந்த ஜில்லாவிற்கு விஜயம் செய்யும்போது குறைகளை எடுத்துச் சொல்ல ஒன்பதுபேர் கொண்ட ஒரு டெபுடேஷன் நியமனம்.

4. கிராண்டுகளைக் கொடுப்பதாக வெளியிட்டுள்ள மாதங்களில் கிராண்டு பில்களை அனுப்பித்தரவேண்டும்.

5. திடீரென்று கிராண்டு குறைக்கும் விதிகளைப் புகுத்தாமல் முன்னமே தெரிவித்து, அதன்பின்னர் விதிகளை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும்.

6. தொழிற்கல்வி கற்றவர்களுக்கு, 8-ம் வகுப்புவரை படியாத தற்காக ரூ. 100-ம், 8-ம் வகுப்புப் படித்த ஆர்டிஷனுக்கு ரூ. 108-ம் கொடுப்பது ஒழுங்கல்ல. ஆகையால் அப்படிப்பட்ட தொழில்பயிற்சி பெற்று ஸர்டிபிக்கேட் வைத்திருப்பவர்களுக்கு ரூ. 168 கொடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்வது.

7. இச்சங்க நடவடிக்கைகளை அச்சிட்டு அங்கத்தினர்களுக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

8. அங்கத்தினர் 1940, 1941-ம் ௵ சந்தா வை கொடுப்பதுடன் கூட்டங்களுக்கும் ஒழுங்காய் ஆஜராக வேண்டுமென்று கேட்டுக்கொள் வது.

9. அடுத்த கூட்டம் 4—6—41 சாத்தாங்குளம் **T. D. T. A.** உயர்தர பாடசாலையில் கூடும்.

---

## (3) திருக்கோவலூர் ரேஞ்ஜு முகையூர் சென்டர். ஆரம்பாசிரியர்கள் சங்கத்தின் வருடாந்திரக் கொண்டாட்டம்

15—3—41 காலை 10 மணிக்கு சங்க நிரந்தர தலைவர் ஸ்ரீ **D.** அருளானந்தம் **B. A., L. T.,** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கடவுள் வணக்கத்திற்குபின் காரியதரிசியால் 1940-ம் வருடத்திய ஆண்டு அறிக்கை வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப் பெற்றது. பின்னர் திருக்கோவலூர் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ **R.** கிருஷ்ணமாச்சாரியார் அவர்களால் கம்பராமாயணத்தில் "விபீடணர்" என்பது பற்றியும், முகையூர் **Rev. Father Mathew** அவர்களால் "ஆரம்பாசிரியர்களும் கிராமங்களும்" என்பது பற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பெற்றன. முகையூர் **R. C.** ஸ்கூல் மாணவர்கள் ஓர் கல்வி சம்பந்தமான சம்பாஷணை நடத்திக் காட்டினர். தலைவர் முடிவுரைக்குப் பிறகு காரியதரிசியால் வந்தனோபசாரம் சொல்லப்பட்டு சந்தன தாம்பூலம் வழங்கப் பெற்று சங்கம் இனிது முடிவுற்றது.

## (4) ஸெயின்ட் பீடர் உயர்தர எலிமென்டரி பெண்பாடசாலை, S. P. G. மிஷன், தஞ்சாவூர்

இப்பாடசாலையின் வருடாந்திரவிழா 19—2—'41-ல் நடந்தது. பள்ளிக்கூட மாணவிகளும் ஆசிரியைகளும் தவிர அனேக பெற்றோர்களும் சினேகிதர்களும் வந்திருந்தனர். இவ்விழாவிற்கு அக்கிராசனம் வகிக்க திருச்சிராப்பள்ளியிலிருந்து **Mrs. Lazenby** வரவழைக்கப்பட்டார். தலைவர் உரைத்ததாவது:—

"தற்காலம் மிகவும் வருந்தத்தக்க உலக ஸ்திதிக்குக் காரணம் நற்குணப் பயிற்சியும், மதப் பயிற்சியும் இல்லாததுதான். வருங்காலத்து உலக ஸ்திதி நம் குழந்தைகளுக்கு நற்குணப் பயிற்சியும், நல்ல படிப்பும் அளிப்பதைப் பொறுத்திருக்கிறது என்பது நிச்சயம். இது பெண்கள் விஷயத்தில் முக்கியமானது. ஆங்கிலப் பழமொழி ஒன்று "தொட்டிலை ஆட்டும் கை உலகத்தை ஆளுகிறது" என்று உண்டு. மனிதர்கள் விரும்புகிறார்களோ இல்லையோ, அது மிகவும் உண்மையாக விளங்குகிறது.

உங்கள் பள்ளிக்கூடப் பெண்களை நல்ல கௌரவமுடைய பிரமுகிகளாக்கக் கொண்டுள்ள எண்ணம் பள்ளிக்கூடம் முழுமையும் பரவி இருக்கிறது. இம்மாதிரி எண்ணத்துடன் ஆரம்பித்தால் இந்தியா முழுமையும் நல்ல கௌரவமுள்ள குணம் பரவும். தேசீயவாதிகள் மட்டும் நல்ல பிரமுகர்களை உண்டாக்குவதில் கொஞ்சம் அதிக சிரத்தை எடுத்துக்கொண்டால் இந்தியாவிற்கு எவ்வளவோ அனுகூலமாயிருக்கும்.

இங்கு அனுபவமுறையில் பயிற்சி அளிப்பது மிகவும் சந்தோஷகரமாயிருக்கிறது. இது ஏட்டுப் பாடத்தைவிட மேலானது. குழந்தைகள் தாங்கள் கற்றதை வீட்டில் அனுபவமுறையில் கொண்டுவருகிறார்கள் என நான் நம்புகிறேன். சோப்பு செய்வது மிகவும் நன்றாயிருக்கிறது.

இங்கு சாரணீயத்தில் பெண்கள் பழகுவது மிகவும் திருப்தியாயிருக்கிறது. இவ்விதப் பயிற்சிக்கு முழு மனதுடன் உதவியளிக்கும்படி பெற்றோர்களை நான் வேண்டுகிறேன். ஏனென்றால் மத வித்தியாசங்களுள்ள இந்தியாவிற்கு முக்கியமாக வேண்டிய எல்லா ஸ்திரீகளிடத்தும் வித்தியாசமில்லாமல் சகோதரித்துவம் பாராட்டுவதை இது போதிக்கிறது.

இங்குள்ள குழந்தைகளின் முகத்தில் சந்தோஷக் குறியைக் காண்கிறேன். அவர்கள் எப்பொழுதும் அப்படியே இருக்க விரும்புகிறேன்.

முடிவில் நான் வேண்டுவது என்னவென்றால், பெற்றோர்களும், உபாத்தியாயர்களும், குழந்தைகளும், தினந்தோறும் இப்பள்ளிக்கூடம் சௌகரியமாயும், சமாதானத்துடனும் நடைபெறுமாறு கடவுளைப் பிரார்த்திக்கவேண்டும். ஏனென்றால் உலகத்தில் இதர இடங்களில் பள்ளிக்கூடங்களில் சௌகரியமும் சமாதானமும் இல்லை. இவ்வுலகத்தில் சமாதானம் சீக்கிரம் திரும்புமாறு நாமெல்லாரும் கடவுளைப் பிரார்த்திப்போமாக."

வந்தனோபசாரத்திற்குப் பிறகு பிள்ளைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. பிறகு நாஷனல் ஆந்தத்துடன் விழா முடிவுற்றது.

### (5) மஷருல் உலூம் எலிமெண்டரி பாடசாலை ஆம்பூர், மாணவர் சங்கம்

20—2—'41-ல் வேலூர் முஸ்லீம் ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் ஜனாப் சையத் நியமேதுல்லா சாகிப் பகதூர் அவர்களால் இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அனேகர் வந்திருந்தனர். தலைவர் வருவதற்கு முன், குப்பையில் எறியப்படும் உபயோகமற்ற காகிதங்களைக்கொண்டு கையால் காகிதம் செய்து காட்டப்பட்டது. பையன்கள் தேர்ச்சியைக் கண்டு வந்திருந்தவர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். தலைவர் வந்ததும் டீ பார்ட்டி நடந்தது. பாடசாலையின் வளர்ச்சியைப்பற்றி தலைமை உபாத்தியாயர் எடுத்து உரைத்தார். தலைவர் உரையில் பையன்களுக்கு வேண்டிய நல்புத்திமதிகளைப் போதித்தார்.

---

### (6) கோர்டைக்கானல் தாலூகா போர்டு ஆரம்ப ஆசிரியர் சங்கம், ஊரல்பட்டி

15—3—'41-ல் ஆலடிப்பட்டியில் இச்சங்கம் கூடிற்று. ஜில்லா போர்டு மெம்பர் ஸ்ரீ K. P. காமாக்ஷி செட்டியார் தலைமை வகித்தார்.

பின்பு "தாலூகா சங்கங்களின் நோக்கங்கள்" என்பதுபற்றியும், "தேச சேவை" என்பதுபற்றியும் சொற்பொழிவுகள் நடந்தன. பிறகு இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(1) மலையில் உடை, உணவு, முதலிய வசதிகளுக்கு அதிக செலவு ஏற்படுவதால், மலைப்படியை உயர்த்தவேண்டும்.

(2) மலையில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்குக் கம்பளி ஆடை அளிக்கவேண்டும்.

தலைவர் முடிவுரையில் அனுதாபம் காட்டி தன்னால் இயன்ற உதவி செய்வதாகக் கூறினார்.

---

### (7) முனிசிபல் ஆரம்ப ஆசிரியர்களின் யூனியன், கரூர்

17-3-'41-ல் இச்சங்கம் கூடியது. 27 மெம்பர்கள் ஆஜராயிருந்தார்கள். நிகழ்ச்சிகள் :—

(1) கடவுள் வணக்கம், (2) சென்ற மீட்டிங் ரிபோர்டு (3) வரவு செலவு பரிசீலனை செய்யப்பட்டு, கையிருப்புப் பணத்தையும், வசூலிக்கப்படும் சந்தாதொகையையும், கரூர் டவுன் கோவாபரேடிவ் பாங்கில் டிபாசிட் செய்யும்படி தீர்மானிக்கப்பட்டது. (4) தலைமை உபாத்தியாயினி ஸ்ரீமதி M. லக்ஷ்மி அம்மாளின் அகால மரணத்தை உத்தேசித்து அனுதாபம் காட்டிற்று. (5) யூனியன் விதிகளைத் திருத்தி யூனியன் வருஷத்தை ஜுன் 1௳ முதல் மே 31௳ முடியக்கொள்ளப்பட்டது. (6) 19-1-'42-க்கு நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். (7) தற்போதுள்ள ரூ. 20-1-28 என்ற டைம் ஸ்கேலை G. O. 1212, dated, 24-7-1924 உத்தரவுப்படி அனுசரித்து 20—1—'30 என்று மாற்றும்படி சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறது. (8) பாடசாலை நாட்களை 220-லிருந்து 200 ஆக மாற்றும்படி அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளுகிறது. (9) ஒரு உபாத்தியாயருக்கு சராசரி 35 பிள்ளைகள் இருக்க

வேண்டுமென்பதை சராசரி 25 பிள்ளைகள் என மாற்றவேண்டும். (10) ஒவ்வொரு ஆரம்ப பாடசாலைக்கும் ஒவ்வொரு தமிழ் மானியூல் சப்ளை செய்யவேண்டும். (11) சர்க்கார் உத்தரவு, அதிகாரிகளின் சர்க்குலர்களுக்கு ஒரு நகல் அனுப்பவேணும். (12) இரண்டு ரூபாய்க்கு மேற்படாமல் ஒரு ரப்பர் ஸ்டாம்பு வாங்க ஏற்பாடு. (13) எய்டெட் ஆசிரியர்கள் 55 வயதிலிருந்து 60 வயது வரை வேலை செய்யலாம் என்றிருப்பதுபோல் முனிசிபல் ஆசிரியர்களுக்கும் உத்தரவு அளிக்கவேண்டும். (14) சென்ற வருஷ நிர்வாகஸ்தர்களின் வேலையைப் பாராட்டியது. (15) ராஜ வாழ்த்து.

---

## (8) முனிசிபல் ஆசிரியர் யூனியன், தூத்துக்குடி

15-3-'41-ல் இச்சங்கம் கூடிற்று. தீர்மானங்கள் :—

(1) ஆரம்ப பாடசாலை வேலை நாட்களை 220-லிருந்து 200 ஆக மாற்றவேண்டும்.

(2) மதராஸ் ஆரம்ப கல்வி மானியூல் ஒரு காப்பி ஒவ்வொரு பாடசாலைக்கும் அனுப்பவேணும்.

---

## (9) பெற்றோர் சங்கம், போர்டு உயர்தர ஆரம்ப பாடசாலை, ஆண்டிமடம்

19-3-'41-ல் இச்சங்கத்தின் கூட்டம் நடைபெற்றது. திருச்சி ஜில்லா போர்டு மாஜி மெம்பர் ஸ்ரீ A. N. K. சிவசிதம்பர முதலியார் தலைமை வகித்தார்: தலைமை ஆசிரியர் T. R. சீனிவாஸாசாரியார் எல்லோரையும் வரவேற்றார்.

அக்கிராசனர், ஆசிரியர், கிராம கணக்கர் ஸ்ரீ ராமசந்திராசார், இவர்களின் சொற்பொழிவின் அம்சங்கள் பின்வருவனவற்றைப் பொறுத்திருந்தன :—பள்ளிக்கூடம் ஒரு சமூக பொது ஸ்தலம், பெற்றோர்களின் ஒத்துழைப்பின் அவசியம், பாடசாலை பிள்ளைகளின் பிற்கால நிலைமையைச் சிறப்படையச் செய்வது, கிராமம் பல துறையிலும் சிறப்படைய பள்ளிக்கூடமே சிறந்த சாதனம், இரவிலும் ஓய்வு நேரங்களிலும், பள்ளிக்கூடத்தையும் உபாத்தியாயர்களையும் கிராமவாஸிகள், விருத்தியாம்ஸங்கள், கல்வி, உலகப் பொது அறிவு இவைகளைக் கற்க உபயோகப்படுத்திக்கொள்ளுதல், சிறு வாசகசாலை ஸ்தாபித்து தினசரி பத்திரிகை வரவழைத்தல், உபாத்தியாயரும், கற்றவரும் முக்கிய விஷயங்களில் பிரசங்கித்தல், விவசாயம், கூட்டுறவு விஷயங்களில் துண்டுப் பிரசுரங்களின் சந்தேகம் தீர்த்தல், பிள்ளைகளைச் சரியாகப் பள்ளிக்கூடம் அனுப்புதல், கெட்ட சகவாசம் செய்யாமலும் வீண் பொழுது போக்காமலும் பார்த்துக்கொள்ளல், வீட்டு அப்பியாசங்களைச் செய்யச் சொல்லல், அடிக்கடி பாடசாலை சென்று தேர்ச்சியைக் கண்ணுற்று, வேண்டியது தெரிவித்தல், உபாத்தியாயரை கிராமத்திற்கு ஓர் அவசியமான புள்ளியாகக் கருதுதல், மேற்கண்டவிதம் செய்வதால் கிராமம் அழகு பெற ஜோதிபோல் விளங்குதல்.

பின்பு அக்கிராசனருக்கு வந்தனோபசாரம் கூறி கூட்டம் இனிது கலைந்தது.

## (10) அல்லிநகரம் போர்டு ஸ்கூல் மாணவர்கள் உல்லாச சுற்றுப்பிரயாணம்

அல்லிநகரம் போர்டு உயர்தர ஆண்பாடசாலையின் 'ஹிந்துஸ்தான்' சாரணச் சங்கத்தின், சாரணர்களும், குருளையர்களுமாக சுமார் 35 மாணவர்கள், மேற்படி சங்கத்தின் சாரண ஆசிரியருடனும், தலைமை யாசிரியருடனும் ஓர் உல்லாசச் சுற்றுப்பிரயாணம் மதுரைக்கு 23–3–'41, 24–3–'41 தேதிகளில் சென்று மதுரையிலுள்ள பல முக்கிய விசேஷ இடங்களைப் பார்வையிட்டு 24–3–'41 தேதி இரவு அல்லிநகரம் வந்து சேர்ந்தார்கள்.

---

## (11) பெற்றோர்கள் சங்கம் கூமாபட்டி

திருமங்கலம் தாலூகா கூமாபட்டி, பெற்றோர்கள் சங்கக்கூட்டம் 29–3–41 தேதி ஸ்ரீ சேது நாராயணராவ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் போர்டு உயர்தர ஆரம்பப்பாடசாலைத் தலைமை யாசிரியர் ஸ்ரீ. ஆர். லக்ஷ்மி நாராயணன் "தமிழ் மொழியின் மாண்பு" என்னும் பொருள்பற்றி இனியதோர் சொற்பொழிவாற்றினார். சாரண ஆசிரியர் ஸ்ரீ. ஜே. டி. செல்லையாத்தேவர் "சாரணரும் தேசசேவையும்' என்னும் விஷயம் பற்றி நீண்டதோர் கட்டுரை வாசித்தார். தலைவர், பெற்றோர்கள் ஆசிரியருடன் எவ்வாறு ஒத்துழைக்க வேண்டும், என்பது பற்றியும் பெண் கல்வியைப்பற்றியும், மாணவரின் கடமையைப்பற்றியும் விரிவாகப் பேசினார். கோகலே சாரண சங்கத்தினர் சில அற்புதமான விளையாட்டுகள் காண்பித்து வந்திருந்தவர்களை மகிழ்வித்தனர். வாழ்த்துப் பாடல்களுடன் கூட்டம் இனிது கலைவுற்றது.

---

## (12) கொடைக்கானல் தாலூகா தாண்டிக்குடி

1941 வருஷம் மார்ச்சு மாதம் 24ந் தேதி தாண்டிக்குடி போர்டு உயர்தர ஆரம்பப்பாடசாலையில் பாலிய செஞ்சிலுவைச் சங்கம் மதுரை ஜில்லாபோர்டு மெம்பர் கனம் **K. P. Kamatchi Chettiar** அவர்கள் தலைமையில் திறுவப்பட்டது. அச்சமயம் மேற்படி பாடசாலையின் தலைமை ஆசிரியர் ஸ்ரீ. **B. S. Meenakshisundaramier** செஞ்சிலுவைச் சங்கத்தைப் பற்றி உபந்யாசம் செய்தார்.

மாணவர்களைக் கொண்டு ஒரு நிர்வாகக் கமிட்டி அமைக்கப்பட்டது. கடைசியில் தலைவர் தமது முடிவுரையில் இம்மாதிரியான காரியங்கள் பாடசாலையின் முன்னேற்றத்திற்கு தகுந்தது என்று கூறினார். கடைசியாக வந்தனோபசாரம் கூறியபின் வாழியசெந்தமிழ் பாடி கூட்டம் இனிது முடிவுற்றது.

---

## (13) ஸ்ரீபெரும்பூதூர் தாலூகா, ஜில்லா போர்டு ஆசிரியர்கள் யூனியன் கமிட்டிக் கூட்டம், ஸ்ரீபெரும்பூதூர்

29—3—'41-ல் கூடி நடத்திய நடவடிக்கைகளின் சுருக்கம்

(1) ரேஞ்சிலுள்ள ஒவ்வொரு சென்டரிலும் பாலர்க் கல்வி, ஆரம்பக் கல்வி வழக்கம்போல் இவ்வருஷமும் வாங்கவேண்டிய தெனவும்,

(2) அடுத்த யூனியன் மஹாசபைக் கூட்டத்தில் புதிய பாட திட்டத்தை ஒட்டி பொருள், கைத்தொழில் காக்ஷி ஏற்படுத்துவதற்கு **S.** ஹென்றி அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டியும், (3) 26—4—'41-ல் சைதாப் பேட்டையில் ஜில்லா போர்டு ஆசிரியர்கள் மகாநாடு நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டு வருவதால் 25—4—'41-ல் ஜில்லா முழுமையும் லீவு விட்டு காம்பன் செட் செய்ய அனுமதியளிக்கவும், சாமான்கள் அதிக விலையாக இருப்பதாலும் அரசாங்கத்தார் இவ்வருஷம் 10 இலட்சத்திற்கு மேல் ஆரம்பக் கல்விக்கு ஒதுக்கி இருப்பதாலும் இம்மாதம் முதற்கொண்டே சம்பள வெட்டை நீக்கவும், செக்வாங்கும் ஆசிரியர்களுக்கு ஏற்படும் செலவை ஜில்லா போர்டாரே ஏற்றுக் கொள்ளும்படிக்கும், **P. D. B**-யைக் கேட்டுக்கொண்டும், (4) ஆசிரியர்களுக்காகவே உலவிவரும் "பாலர்க் கல்வி" "ஆரம்பக் கல்வி" பத்திரிகைகளில் தற்போதைய புதிய பாடதிட்டத்தை ஒட்டி கற்பிக்கவேண்டிய விஷயங்களை விளக்கி வரும்படியும், எந்தெந்த வகுப்புக்கு எந்தெந்த பாடங்களை எப்படி எப்படி என்ன உபகரணங்களைக் கொண்டு போதிக்கலாம் என்பனவற்றை பல அறிஞர்களைக்கொண்டு விளக்கி வரும்படி இவற்றின் பத்திராதிபர்களை கேட்டுக் கொள்ளலாம், (5) போர்டு பாடசாலைகள் சம்பந்தப்பட்ட வரையில் இந்த ஜில்லா முழுமைக்கும் ஒரே ஜில்லா போர்டின் மானேஜ்மெண்டில் இருப்பதாலும் இந்த ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு தாலூகா யூனியன்களும் சிற்சில சமயங்களில் ஒரேவிதமான தீர்மானத்தை ஜில்லா போர்டாருக்கோ, அரசாங்கத்தாருக்கோ அனுப்ப நேரிட்டு அதனால் ஆபீஸ்களுக்கு அதிகக் கஷ்டமும், இரட்டிப்பு வேலையும் ஏற்படுவதாலும் எல்லாத் தாலூக்கா யூனியன்களும் ஒன்றுக்கொன்று பொதுவான விஷயங்களைக் கலந்து பேச இடம் அளிக்கும்படி காருண்ய கவர்ன்மெண்டார் அவர்களும், சென்னை கல்வி இலாகா டைரெக்டர் அவர்களும் **G. O. No.** 416. **L & M. Dated** 4—2—'39 ஐ புனராலோசனை செய்து ஷை உத்திரவை விரிவுபடுத்தி ஜில்லா யூனியன்கள் ஸ்தாபித்துக்கொள்ள அனுமதியளிக்க வேணுமாயும், (6) பிரதி வருஷமும் உபாத்திமை போதனா முறைப் பாடசாலைக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது உபாத்தியாயர்களின் மக்களுக்கு முதலில் பிரதானித்தும் அளிக்கவேணுமென்கிற விஷயங்கள் தீர்மானிக்கப்பட்டன.

குறிப்பு:—26—4—'41-ல் சைதாப்பேட்டையில் செங்கற்பட்டு ஜில்லா போர்டு தலைவர் ஸ்ரீ **A. S.** துரைசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் ஜில்லா போர்டு ஆசிரியர்கள் மா நாடு கூடப்படும். அவ்வமயம், கிரிஸ்துவக் கல்லூரி போதக ஆசிரியர் ஸ்ரீ **M. S.** சபேசன் அவர்கள், மற்றும் பல அறிஞர்கள் சொற்பொழிவு ஆற்றுவார்கள். ஆசிரியர் அனைவரும் வருவார்களாக.

**C. Balasubramaniam,**
*Secretary.*

---

## (14) பழநித் தாலூக்கா, இடைய கோட்டை சென்டர், ஆரம்ப ஆசிரியர் சங்க முதல் ஆண்டு விழா:—

5—4—41-ல் பிற்பகல் 2 மணிக்கு இடைய கோட்டை மாண்புமிக்க குமார ஜமீன்தார் ஸ்ரீமான் **K.** சுப்பிரமண்ய லட்சுமிபதி நாய்கர் அவர்கள் தலைமையின்கீழ் இவ்வூர் போர்டு உயர்தர ஆரம்ப ஆண் பாட

சாலையில் ஷை சங்க முதல் ஆண்டு விழா விமரிசையாகக் கொண்டாடப் பட்டது. அவ்வமயம் ஸ்ரீ R. வெங்கிடராஜு B.A., B.L., அவர்களால், "அரசியலில் ஆரம்ப ஆசிரியர்களின் பங்கு" என்ற பொருள் பற்றியும்; பழனி, முனிசிபல் உயர்தர பாடசாலை, தமிழ் பண்டிதர் ஸ்ரீ K. S. சுந்தர சாமி அய்யர் அவர்களால் "இந்திய சமூகமும் தேகப் பயிற்சியும்" என்ற விஷயமாகவும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. பின்பு மாலை 6 மணிக்கு தேசியகீதம் பாடப்பட்டு கூட்டம் இனிது முடிவடைந்தது.

---

## (15) ஆரம்ப ஆசிரியர் சங்கம், கானடுகாத்தான்

5-4-'41-ல் இச்சங்கத்தின் 12-வது வருஷாந்தரவிழா நடந்தது. ஸ்ரீ V. ரங்கசாமி அய்யங்கார், B.A., L.T., தலைமை வகித்தார்.

வருஷாந்தர அறிக்கைக்குப்பிறகு "கலைவளர்ச்சி" என்பது பற்றி ஸ்ரீ K. சுப்ரமணியமும், "கணிதத்தின் அவசியம்" என்பது பற்றி ஸ்ரீ K. S. கிருஷ்ணமூர்த்தியும் பேசினார்கள். பிறகு "புத்தர் உலகைக் காணல்" என்பதை பையன்களும் பெண்களும் நடித்துக் காட்டினார்கள். சாரணர்களால் சிங்கக்குட்டி விளையாட்டுகள் காண்பிக்கப் பட்டன. பையன்களுக்கும் பெண்களுக்கும் பரிசு வழங்கப்பட்டு கூட்டம் கலைந்தது.

---

## (16) முனிசிபல் ஆரம்ப ஆசிரியர்களின் யூனியன், ஈரோடு

6-4-'41-ல் இச்சங்கத்தின் ஆரம்பவிழா நடந்தது. முனிசிபல் நகரசபைத்தலைவர் ஸ்ரீ R. K. வெங்கிடசாமி நாயக்கர் தலைமை வகித்தார். ஆசிரிய ஆசிரியைகளும் பல கனவான்களும் ஏராளமாக குழுமி இருந்தனர்.

டவுன்ஸ்கூல் தலைமை ஆசிரியர் ஸ்ரீ N. B. சின்னக்கண்டர் அவர்களால் ஓர் உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. தலைவர் தன்னை யூனியன் கௌரவப்படுத்தியதற்கும், ஆசிரியர்களின் உன்னத லக்ஷியத்தையும் கல்வியின் வளர்ச்சிக்கு இன்றியமையாத மார்க்கத்தையும் இனிது எடுத்துரைத்தார். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :—

1. முனிசிபல் ஆரம்பஆசிரியர்களுக்கும் ஆசிரியைகளுக்கும் கவர்மெண்டு ஸெகண்டரி ஹையர்கிரேட் ஸ்கேலாகிய ரூ. 30-3/2-45-2/2-55-ம், 23-2/2-45 வீதமும் கொடுக்கும்படியாக முனிசிபல் அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளுகிறது.

2. ஆசிரியர்களுக்கும் ஆசிரியைகளுக்கும் சிட்டி அலவன்ஸ் கொடுத்து உதவும்படி முனிசிபாலிடியாரைக் கேட்டுக்கொள்கிறது.

யுத்தத்தின் காரணமாக பண்டங்கள் அதிக விலை விற்பதால் யுத்த அலவன்ஸ் கொடுத்து உதவும்படி நகரசபையாரைக் கேட்டுக் கொள்கிறது.

3. முனிசிபல் ஆண் பள்ளியில் ஏற்படும் காலிஸ்தானங்களுக்கு ஆசிரியர்களையும், பெண் பள்ளியில் ஏற்படும் காலிஸ்தானங்களுக்கு

ஆசிரியைகளையும் நியமிக்கவேண்டும். (இது பின்னால் வாபீஸ் பெற்றுக் கொள்ளப்பட்டது.)

4. லோயரிலிருந்து ஹையருக்கு பாஸ் செய்தவர்களுக்கு பர்ஸனல் அலவன்சை சம்பளமாக மாற்றும்படியும் அப்படி மாற்ற விட்டால் இங்கிரிமெண்டும்போது சம்பளம் பாதிக்கப்படுகிறது என்பதற்காகவும் சர்க்காரையும், முனிசிபாலிடியையும் கேட்டுக்கொள்கிறது.

பின்னர் டிப்டி இன்ஸ்பெக்டர் அவர்கள் ஆசிரியர்களின் குறைகளை அதிகாரிகள் கவனிக்கவேண்டுமென்றும் ஆசிரியர்களும் தங்கள் அறிவு வளர்ச்சிக்கு இன்றியமையாத சாதனத்தை அடையும் வகையையும் எடுத்துக் கூறினர். பிறகு ஆசிரிய ஆசிரியை நியமனத்தைப்பற்றியும் கூறி முடித்தார்.

---

## (17) பஞ்சாயத்து போர்டு பாடசாலை, வையாவூர்

29-3-'41 அன்று காஞ்சீவரம் டெப்டி இன்ஸ்பெக்டர் அவர்கள் தலைமையில் ஷை பாடசாலையின் முதலாண்டுவிழா நடத்தப்பட்டது.

அச்சமயம் தலைவர் "பெற்றோரின் கூட்டுறவு" என்பது பற்றியும் ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் "கிராம முன்னேற்றம்" என்பது பற்றியும் உபன்னியசித்தனர். பிறகு குழந்தைகளுக்குப் பரிசு வழங்கினர். 'தருமம் தலைகாக்கும்' என்ற வியாசத்தை மாணவர்கள் சம்பாஷணை ரூபமாக நடத்திக்காட்டினர். இதில் இருபெண்கள் கலெக்டராகவும், தாசில்தாராகவும், நடித்தது மிகவும் மெச்சத்தக்கதாயிருந்தது. இம் மாதிரியான விஷயங்களை அடிக்கடி நடத்தவேண்டுமென்று தலைவர் சொன்னர். பிறகு பிரைஸ் புஸ்தகங்கள் கொடுக்கப்பட்டன.

---

## (18) ஓமலூர் தாலூகா, போர்டு ஆரம்ப ஆசிரியர் யூனியன் மேச்சேரி

30-3-41ல் தாரமங்கலத்தில் யூனியன் காரியக் கமிட்டி கூடியது. தீர்மானங்கள் :—

1. சேலம் ஜில்லா போர்டு பிரசிடெண்டு அவர்களின் R. O. C. No. 12004 E. 3-40 dated 9-11-1940 டிராப்ட் சுற்றறிக்கையை ரத்து செய்யவேணுமாய் பல தாலூகா ஆரம்ப ஆசிரிய யூனியன்கள் அபிப்பிராயம் தெரிவித்தும் அதை மாற்றாது 1-3-41 லிருந்து அமுலுக்கு கொண்டுவந்துள்ளது ஆசிரியர்களின் தீராத் துரதிர்ஷ்டமே யாகும். மீண்டும் புனராலோசனை செய்து அமுலிலிருக்கும் உத்தரவை ரத்து செய்வதற்கு அடியிற்கண்ட தகவல்களை பிரசிடெண்டு அவர்களுக்கு எடுத்துரைக்கலாமாக இக்காரியக் கமிட்டி தீர்மானிக்கிறது:—

(i) சில ஆசிரியர்களின் ஊக்கக் குறைவினாலும் முயற்சியின்மையாலும் ஆஜர் குறைவு அதிகமாகி வருவதற்கு அவர்களின் சமாதானங்களைப் பெற்று கல்வி அதிகாரிகளுடைய சிபார்சின்பேரில் தண்டிப்பது சிறந்ததாகும். அப்படிப்பட்டவர்களை சீர்திருத்த இந்த யூனியன் முயன்று வருகிறது.

**(ii)** மேற்படி உத்திரவினால் நியாயமாக ஊக்கத்துடன் உழைக்கும் ஆசிரியர்களுக்கும் அபராதம், அவருடைய குற்றத்தினால் அல்லாமல் ஏற்படும்படி செய்திருப்பது வருந்தத்தக்கதாகும்.

**(iii)** ஆஜர் குறைவிற்கு பெரும்பாலும் பெற்றோர்களே காரணம். பிரசாரத்தினால் மட்டும் பெற்றோர்களை திருப்பி பிள்ளைகளைச் சரிவர பள்ளிக்கு வரும்படி செய்வது இயலாத காரியம்.

**(iv)** தவிர கீழ்கண்ட நியாயமான காரணங்களால் ஆரம்ப பாடசாலைகளில் ஆஜர் குறைவு அதிகம் ஏற்படுகிறது. இதற்கு ஆசிரியர்கள் பொறுப்பாளிகளாகார்கள்.

(*a*) சிறு பிள்ளைகளுக்கு தவிட்டம்மை, கண்ணோய் போன்ற வியாதிகள் வருவது.

(*b*) அயலூருக்கு பெற்றோர்கள் போகும்போதுகூட அழைத்துச் செல்லல்.

(*c*) பண்டிகை, திருவிழா முதலியவற்றிற்கு முன்னும் பின்னுமாக சிலநாள் நின்றுவிடுவது.

(*d*) மழைகாலம்.

(*e*) உழவு அறுவடை காலங்களில் பிள்ளைகளை ஒத்தாசைக்கு பெற்றோர் நிறுத்திக்கொள்வது.

(*f*) சில சமயம் யாத்திரை ஸ்தலங்களுக்குச் சென்றுவிடல்.

(*g*) இதர நியாயமான காரணங்கள்.

**(v)** மேற்கண்ட காரணங்களால் ஆஜர் குறைவு அதிகம் ஏற்பட்டு நியாயமாக வேலை செய்யும் ஆசிரியர்களுக்கும் அபராதம் விழ ஏதுவாகிறது. இதனால் ஆசிரியர்களின் அற்ப சம்பளத்திலும் குறைவு ஏற்படுவதோடு அவர்களின் ஊக்கத்தையும் ஒருவாறு குறைக்கிறது. இது ஆரம்பக் கல்வியின் முன்னேற்றத்திற்கே தடையாகுமென இக் காரிய கமிட்டி கருதுகிறது. ஆகவே மேற்படி உத்திரவை மீண்டும் புனராலோசனை செய்து ரத்து செய்ய வேண்டுமாய் சேலம் ஜில்லாபோர்டு பிரசிடெண்டு அவர்களை இந்த யூனியன் காரியக்கமிட்டி வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறது.

2. முதல் தீர்மானத்தை ஆசிரியர் பக்ஷமாக ஜில்லா போர்டு பிரசிடெண்டுக்கு சிபார்சு செய்யும்படி ஜில்லா கல்வி அதிகாரியைக் கேட்டுக்கொள்வது.

3. **Automatic** அபராத விஷயமாய் ஜில்லா தூதுகோஷ்டி செல்லல்.

4. தூதுகோஷ்டிக்கு யூனியன் பிரதிநிதிகளாக யூனியன் தலைவரும் உபதலைவரும்.

5. தூதுசெல்லும் விஷயமாக தபாற் செலவுகளை மட்டும் யூனியன் பொறுத்துக்கொள்ளும்.

6. பாடசாலை விடுமுறைகளுக்கு மூடவும் திறக்கவும், கிராம முனிசீப்பு அத்தாட்சிபெற வேண்டுமென்பதை நீக்கி உத்தரவு போட வேண்டும்.

7. 1932-க்கு முன்பு S. S. L. C. பூர்த்தி செய்தவர்களுடைய ஹையர்கிரேடு சர்டிபிக்கேட்டுகளைச் சகெண்டரி கிரேடுகளாக மாற்ற வேணும்.

8. லோயர் கிரேடு பரீட்சையில் தேருதவர்களுக்கு மேலும் மேற்படி பரீட்சைக்கு ஆஜராக அனுமதி அளிக்கவேணும்.

9. S. S. L. C. பூர்த்தி செய்திருக்கும் அசிரியர்கள் டிரெயினிங்குக்குப் போகாமல் செகண்டரி T. S. L. C. பரீட்சைக்குப் போக அனுமதிக்க வேணும்.

10. ஹையர் கிரேடு உபாத்தியாயர்கள் S. S. L. C. பூர்த்தி செய்திருந்தால் ஆரம்ப பாடசாலைகளில் செகண்டரி கிரேடு உபாத்தியாயர்கள் கற்பிக்கும் பாடங்களை போதிக்க அனுமதி அளிக்க வேண்டும்.

## மதிப்புரை

பாலர் இயல்பும் கல்வி பயிற்றலும் K. R. அப்ளாச்சாரி, எம். ஏ., எல். டி., இயற்றியது. V. S. வெங்கடருமன் கம்பெனி, பப்ளிஷர்ஸ், கும்பகோணம். விலை ரூ. 1

'பாலர் இயல்பும் கல்விப் பயிற்றலும்' என்னும் விஷயத்தை எலிமெண்டரி கிரெட் பரிக்ஷைக்கும் கட்டாயப் பாடமாக இப்பொழுது வைத்துள்ளார். இதுவரை அப்படியல்லாமலிருந்தது ஒரு பெரும் குறையே. இந்த புஸ்தகம் எலிமெண்டரி கிரேட் பயிற்சி பெறுபவர்களுக்கும், செகண்டிரி கிரேட் பயிற்சி பெறுபவர்களுக்கும் உபயோகமாகும்படி எழுதப்பட்டுள்ளது. இவ்விஷயங்களைப்பற்றி ஆங்கிலத்தில் பல புஸ்தகங்கள் இருந்தபோதிலும் தமிழில் இதுவே முதற் புத்தகமென்று சொல்லலாம். மனநூல் சென்ற 50 வருஷகாலங்களில் விசேஷ வளர்ச்சி பெற்றுள்ளது. பல நவீன கலைச்சொற்களை உண்டாக்கியுள்ளார்கள். இவைகளுக்கேற்ற தமிழ்ச் சொற்கள் கண்டுபிடிப்பது மிகவும் கடினமானது. ஆயினும் ஸ்ரீமான் அப்ளாச்சாரியார் மிகப் பிரயாசைகொண்டு, எளிதில் அறிந்து கொள்ளக் கூடுமான சொற்களையே உபயோகித்துள்ளார். இவரின் நடையும் சுலபமானதாயுள்ளது. இந்நூலின் இறுதியில் பயிற்சி வினுக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தமிழ், ஆங்கில அரும்பத அகராதியும் ஆங்கில தமிழ் அகராதியும் சேர்த்துள்ளது மிகவிசேஷமானது. எலிமென்டரி, செகண்டிரி கிரேட் பரிக்ஷை மாணவர்களுக்கும் இப்புத்தகம் இன்றியமையாததாகும்.

வெளி வந்துவிட்டது! :: முழுவதும் புதிய முறை!!

முகுந்தன் தினசரிக் குறிப்பு MUKUNTHAN : DIARY :

விஷு வருடத்திய பஞ்சாங்கம்

பலராலும் போற்றப்படுவது!!! விலை அணு 1. (தபால் சிலவு தனி)

10 புத்தகங்கள் முன்பணத்துடன் ஆர்டரனுப்பும் ஆசிரியர்களுக்கு தபாற்சிலவு இனும்!

முகுந்தன் அண்டு கம்பெனி, வண்ணாரப்பேட்டை — சென்னை —

# பத்திராதிபர் குறிப்புகள்

## மலையாளம் ஜில்லா போர்டு

சர்க்கார் அறிக்கைகளில் ஜில்லா போர்டார் நிர்வாகம் சரியாகச் செய்வதில்லை என்ற புகாரை அடிக்கடி காணலாம். முக்கியமாக தங்களுடைய பள்ளிக்கூடங்களைச் செவ்வையாய் ஜில்லா போர்டு நடத்துவதில்லை என்பதை பலதடவை கேட்டிருக்கிறோம். ஆசிரியர்களை மாற்றுதல், வேண்டாத இடங்களில் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்துதல், பள்ளிக்கூடங்களுக்கு வேண்டியதைக் காலத்தில் கொடாதிருத்தல், இவை போன்ற ஊழல்கள் இருப்பதை நாம் கேட்டிருக்கிறோம். மேலும் சில ஜில்லா போர்டுகளில் ஆசிரியர்களுக்கு மாதாந்தரச் சம்பளத்தைக் காலத்தில் கொடுப்பதில்லை. பல மாதங்கள் நிலுவை நிற்பதால் ஆசிரியர்கள் கஷ்டப்படுகிறார்கள். சில வருஷங்களுக்கு முன் வட ஆற்காடு ஜில்லாவில் சம்பளம் கொடுக்கப்படாததால் ஆசிரியர்கள் வருந்தினார்கள். அச்சமயம் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்ட ஜில்லாக் கலெக்டர் அவர்கள் சர்க்காருக்குத் தெரிவித்து தகுந்த ஏற்பாட்டைச் செய்தார்கள்.

மலையாளம் ஜில்லா போர்டின் கீழுள்ள ஆரம்பப் பள்ளிக்கூடங்களின் ஆசிரியர்களுக்கும் இவ்வருஷம் சம்பளம் கொடுபடவில்லையாம். இப்போது இந்த ஜில்லா போர்டின் நிர்வாகமானது கலெக்டரிடமிருக்கிறது. சர்க்கார் சுமார் ஒரு லக்ஷம் ரூபாய் போர்டுக்குக் கொடுத்து உதவியதன்பேரில் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கிடைப்பதாயிற்று. வேண்டிய சம்பளத்தைக் காலாகாலத்தில் கொடுத்தால்தான் வேலையைச் சரியாகவும், செவ்வையாகவும் செய்யக்கூடும். சம்பளம் கொடுபடாதிருப்பின்ஆசிரியர்கள் வாழ்வதெப்படி? அவர்கள் வேலையில் கவனம் செலுத்தக் கூடுமா?

இந்தப் பள்ளிக்கூட வருஷ ஆரம்பத்தில் சில பள்ளிக்கூடங்களை மூடும்படியாகவும் அதனால் சுமார் இருநூறு ஆசிரியர்களை வேலையை விட்டு நீக்கவேண்டியதாகவும் மலையாளம் ஜில்லா போர்டுக்கு சர்க்காரிடமிருந்து தகவல் வந்ததை நேயர்கள் அறிவார்கள். சித்தூர் ஜில்லாவிலும் இவ்விதக் குழப்பம் உண்டாகி ஆசிரியர்களின் சம்பளத்தில் வெட்டுப்போடவேண்டியதாயிற்று. வேறு சில ஜில்லாபோர்டுகளிலும் சம்பளப் பிடித்தமோ, வெட்டோ, ஆசிரியர்களை நீக்குவதோ ஆலோசனைக்கு வந்ததை தினசரிப் பத்திரிகைகளில் நாம் கண்டோம்.

ஜில்லா போர்டுகளின் நிர்வாகமானது சர்க்கார் முறையையே தழுவி இருக்கும். ஆகவே பொதுஜனங்கள் ஜில்லா போர்டை சர்க்கார்

அங்கங்களென்றே கருதுகிறார்கள். இதில் மேற்கூறிய ஊழல்களிருப்பின் பொதுஜனங்களுக்கும் வேலைசெய்பவர்களுக்கும் நம்பிக்கை குறைந்து போய்விடலாம். ஆகவே, ஊழல்களின் காரணத்தைக்கண்டுபிடித்துச் சரியான நிர்வாகமுறையை நிலைநிறுத்துவது சர்க்காரின் கடமை. கல்வியைப் பற்றினவரையில் ஜில்லா போர்டுகள் சரியாக நிர்வாகம் செய்யவில்லை என்று வருஷக் கடைசியில் அறிக்கையில் சர்க்கார் எடுத்துக்காட்டுவது போதாது. கல்வி பொறுப்பை ஜில்லா போர்டுகள் தாங்கக்கூடுமா? வேண்டிய பணம் அவைகளிடமிருக்கின்றதா? பள்ளிக்கூடங்களை நிர்வாகஞ் செய்வதற்கேற்ற வழியில் நிபந்தனைகளையோ விதிகளையோ மாற்றுவதெப்படி? ஜில்லா போர்டு மூலமாக ஆரம்பக் கல்வியை நிர்வாகம் செய்யும் பாலிஸியைப் பரிசீலனை செய்து தகுந்த உபாயங்களை அனுஷ்டிக்காவிடில் இப்போது நாம் ஜில்லா போர்டு மூலமாகச் செலவழிக்கும் பெருந்தொகைக்கேற்ற பலன் ஏற்படாது. ஊழல்களும் மேன்மேலும் அதிகரிக்கக்கூடும். இவற்றை உடனே கவனித்துத் தகுந்தபடி பாலிஸியை மாற்றுவது மிகவும் அவசியம்.

மலையாளம் ஜில்லா ஆசிரியர்களின் கஷ்டம் ஒருவாறு நீங்கியது பற்றி நாம் மிகவும் சந்தோஷப்படுகிறோம். இவ்விதக் கஷ்டமே எந்த ஜில்லாவிலும் ஏற்படாத வழியைக் கவனிக்கும்படி சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

---

## விநோத முறை

ஆரம்பக் கல்வியைப் பரவச்செய்வது அவசியமே. சர்க்காரிடமிருந்து கிராண்டு வாங்கும் பள்ளிக்கூடங்களில் ஜாதிமத பேதமின்றி எல்லாப் பிள்ளைகளையும் சேர்க்கவேண்டுமென்கிற கொள்கையும் தவறென்று சொல்வதற்கில்லை. தீண்டாதாரினத்தைச் சேர்ந்த பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களில் சேர்ப்பதற்காகக் கையாளும் சில முறைகள் சரியானவையாவென்று அதிகாரிகளே யோசித்தல் நலம். உதவி பெறும் ஆரம்பப் பள்ளிக்கூடமொன்றில் தீண்டாதாரினத்தைச் சேர்ந்த பையன் ஒருவன்கூட இல்லையானல் அதைக் குறையாக அதிகாரிகள் நினைப்பது சரியாகுமா? ஆதித் திராவிடப் பிள்ளைகளில்லாததைக் கொண்டு மானேஜர் ஆதித் திராவிடப் பிள்ளைகளைச் சேர்ப்பதில்லை என்று முடிவு செய்வது நியாயமா? இந்தக் காரணத்தைக்கொண்டு தகுந்த உதவியை மறுப்பது நியாயமா? மானேஜர்களே சேரியில் சென்று பிள்ளைகளைச் சேர்க்கவேண்டுமென்பது பொருந்துமா? மானேஜர்களின் மனதை அறிய விரும்பின் அதிகாரிகளே பள்ளிக்கூடமில்லாத சேரியிலுள்ள பிள்ளைகளை அனுப்பிப் பார்க்கலாமல்லவா? சில வருஷங்களுக்கு முன்பு ஜில்லா கல்விச் சங்கங்களின் அபிப்பிராயத்திற்கு ஒரு பிரச்னை வந்தது. எந்தப் பள்ளிக்கூடத்தில் சில வருஷங்களாக ஆதித்

திராவிடப் பிள்ளைகள் காணப்படவில்லையோ அப்பள்ளிக் கூடங்கள் அவர்களைச் சேர்க்கும் விருப்பமில்லாதனவாக நினைக்கப்படு மென்றும், அவற்றிற்கு கிராண்டு கொடுக்கக் கூடாதென்றும் அந்தப் பிரச்னையில் அடங்கி இருந்தது. இது விநோதமான யோசனை யல்லவா? இதனால் ஆதித்திராவிடப் பிள்ளைகளுக்கு சௌகரியமா? அல்லது ஆரம்பக் கல்விக் காவது உதவியுண்டோ? சில இடங்களில் ஆதித்திராவிடப் பிளளைகள் ஜில்லா போர்ட்டு ஆரம்பப் பள்ளிக் கூடத்தில் சேர்ந்தவுடன் அப்பள்ளிக் கூடத்தை மூடிவிடவேண்டிய நிலைமை ஏற்பட்டது அதிகாரிகளுக்குத் தெரிந்த விஷயமே. மானேஜர்களும் ஆசிரியர்களும் தம் பள்ளிக் கூடங் களை நடத்துவதில் கஷ்டங்கள் பல அனுபவிப்பதை அதிகாரிகள் அறி வார்கள். அவர்கள் எவ்வித முயற்சி எடுத்த போதிலும் படிப்பு மேம் பாடு அடையாததையும் அதிகாரிகள் அறிவார்கள். வீடு வீடாய்ச்சென்று பையன்களைச் சேர்ப்பதற்கும் ஓர் அளவு வேண்டும். ஆரம்பக் கல்வி யைப் பரவச் செய்வதற்கும், பிள்ளைகள் சேர்வதற்கும், சேர்ந்தபின் விடாது பள்ளிக்கூடம் செல்வதற்கும் அதிகாரிகளும் மானேஜர்களுடன் சேர்ந்து உழைத்து வரவேண்டும். கிராண்டைக் கொண்டே சீர்திருத்த மும் ஒழுங்கும் ஏற்படுமென்று நினைப்பது சரியல்ல. செவ்வையாக உழைத்து வரும் பள்ளிக்கூடங்களுக்கு தாராளமான உதவியைக் கொடுத்து உற்சாகத்தை உண்டுபண்ணவேண்டும். எந்த விதத்தில் கிராண்டைக் குறைக்கலா மென்ற மனப்பான்மையை விட்டு விடுவது நலம். எவ்விதக் கஷ்டங்களுக் கிடையில் ஆசிரியர்களும் மானேஜர் களும் உழைத்து வருகிறார்களென்பதை அதிகாரிகள் அறிந்து அவர் களுக்கு உபாயத்தைச் சொல்லி ஒத்துழைப்பின் ஆரம்பக் கல்வி முன் னேற்ற மடைவது நிச்சயம்.

---

**T. ராமானுஜாச்சாரியார்**

சென்னை ஹிந்து ஹைஸ்கூல் மாஜி உதவி ஆசிரியராயிருந்த ஸ்ரீ T ராமானுஜாச்சாரியார் 12-4-'41 காலையில் காலஞ்சென்று விட்ட தைக் கேட்டு நாம் மிக வருந்துகிறோம். அவர் தென்னிந்திய ஆசிரியர் சங்கத்துப் பழங்காலத் தொண்டர். பல வருஷங்கள் (1921-1929) இச்சங்கத்தின் உதவி காரியதரிசியாக இருந்துவந்தார். ஆசிரியச் சங் கங்கள் ஸ்தாபிப்பதற்கும், சங்கங்களில் ஆசிரியர்களுக்கு உற்சாகம் உண்டாக்கும் பொருட்டும் இவர் செலவையும் சிரமத்தையும் பாராட்டா மல் பலமுறை தமிழ் நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்துவந்தார். நமது மாகாணக் கல்வி மகாநாட்டுக்கு வருஷந்தோறும் இவர் தவறாமல் வருவதல்லாமல் ஆசிரியர் தொழில் முறையிலுண்டான கஷ்டங்களை உருக்கத்துடன் எடுத்துரைத்துவந்தார். தென்னிந்திய ஆசிரியர் காப்பு நிதி ஸ்தாபனம் செய்ததற்கு இவர் செய்த தொண்டு இணையற்றது. சென்னை ஜில்லா ஆசிரியர் சங்கத்துக்கும் இவர் மிக்க பாடுபட்டுள்ளார். அவருடைய ஆத்மா சாந்தி யடையுமாக.

# பாலர் கல்வி சந்தாதார்களுக்கு அறிக்கை

சென்ற இதழில் சந்தா பாக்கியுள்ள நம்பர்களைக் குறிப்பிட்டோம். அனேகர் சந்தா அனுப்பினாலும், இன்னும் சிலரிடமிருந்து பதில் வரக்காணோம்.

ஆசிரியர்களின் நன்மைக்காக பாடுபடும் ஆசிரிய சங்கத்தால் ஆசிரியர்களின் பொருட்டுப் பிரசுரிக்கப்படும் இப் பாலர் கல்வியை ஆசிரியர்கள் ஆதரிக்க வேண்டாமா? மேன்மேலும் ஆசிரியர்கள் சந்தாதாராகச் சேரும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஏப்ரல் மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்களைக் கீழே கொடுத்துள்ளோம். அவர்களை தயவுசெய்து தங்கள் சந்தாவை முன்பணமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். **சந்தாவை இந்த மாதத்திற்குள் அனுப்ப முடியாவிட்டால், எப்போழுது அனுப்பிவைக்க முடியும் என்று தெரிவித்தால் போதுமானது என்று சந்தாதார்களுக்கு ஞாபகப் படுத்துகிறோம்.**

குறிப்பு:—*சந்தா நம்பர்கள் விலாசத்துடன் ( ) அடைப்புக்குள் குறிக்கப்பட்டிருக்கின்றன.*

**சென்னை M. 42.**

**செங்கல்பட்டு CH. 31, 33.**

**தென்னாற்காடு SA. 80.**

**தஞ்சாவூர் Tan. 34, 35, 73, 74, 75, 78, 79, 80, 81.**

**திருச்சி Tri. 50.**

**ராமனாதபுரம் Rd. 15, 30, 52, 54, 58.**

**திருநெல்வேலி Tin. 1, 69, 72, 73, 74, 76, 78, 79, 83.**

**சேலம் S. 57, 58.**

F. M. S & Ceylon Mis. **5, 46.**

**பத்திராதிபர்.**

# 32ND MADRAS PROVINCIAL EDUCATIONAL CONFERENCE, 1941, RISHI VALLEY.

## LIST OF DELEGATES

**Municipal High School, Tadpatri**

1. Sri, V. Vaideeswara Iyer
2. ,, K. Venkatachar
3. ,, P. Venkatesam
4. ,, A. Srinivasayya

**London Mission High School, Gooty**

5. Sri C. Ranganatha Iyengar
6. ,, P. M. Vijayam
7. ,, S. John Moses
8. ,, C. Ramakrishna Rao
9. ,, A. Ramachandra Rao
10. ,, D. J. Sikhamany
11. ,, Ch. B. Jacob

**Taluk Aided Ele. Teachers' Union, Tiruvannamalai**

12. Sri V. K. Venkataraman

**S. M. D. High School, Vellore**

13. Sri S. Srinivasan

**Board High School, Chengam**

14. Sri V. T. M. Tirunavukkarasu
15. ,, S. Arunachallam Pillai
16. ,, P. Vedadri Pillai
17. ,, A. N. Lakshmana Rao
18. ,, V. R. Nataraja Iyer
19. ,, S. Srinivasan
20. ,, P. Kuppuswamy
21. ,, S. K. Lakshmanan
22. ,, A. S. Doraiswami Pillai
23. ,, K. Sundaresan

**Municipal High School, Villupuram**

24. Sri A. Nagaraja Iyer
25. ,, V. Jayarama Iyer
26. ,, T. V. Doraiswami
27. ,, C. V. Pichu
28. ,, K. Narayanaswamy Iyer
29. ,, A. N. Sethurama Iyer

**St. John's High School, Bellary**

30. Sri A. Purnapragnachar
31. ,, K. Swami Rao
32. ,, K. Sitarama Rao
33. ,, Ch. Tirumaleswara Bhat
34. ,, U. Purnachandra Rao
35. ,, S. V. Ramaswami Iyer

**Municipal High School, Bellary**

36. Sri G. Venkatesiah

**Board High School, Yemmiganur**

37. Sri B. Gururaja Rao
38. ,, S. B. Saligram
39. ,, R. Veerana Gowd

**Theosophical College, Madanapalle**

40. Sri E. N. Subrahmanyam
41. ,, S. Srinivasan
42. ,, H. Sunder Rao

**Board High School, Chandragiri**

43. Sri A. S. Krishnamurthi Sastri
44. ,, T. L. Narayana Rao Naidu
45. ,, K. A. Narayana Rao

**A. A. M. Girls Sec. School, Madanapalle**

46. Miss C. Royal
47. ,, A. Zaccheus
48. Sri R. J. Sundarayya

**Board High School, Kalahasti**

49. Sri A. S. Venkatarama Iyer
50. ,, K. Nagesan

**P. M. High School, Renigunta**

51. Sri K. C. Gnananandam
52. ,, G. John Vivekam

**Board High School, Chittoor**

53. Sri. P. L. Ramanatha Rao
54. ,, J. Daniel
55. ,, P. Subramaniam
56. ,, K. Satyanarayanamurthi
57. ,, D. Purushotham
58. ,, P. B. Krishnamurthi

**Board High School, Dharapuram**

59. Sri K. S. Srinivasa Iyer
60. ,, R. Ramakrishnan

**Municipal High School, Proddattur**

61. Sri S. N. Ramaswami Iyer
62. ,, V. Seshacharlu
63. ,, A. Subramanyam
64. ,, B. Govindappa

**St. Aloysius College. Mangalore**

65. Sri S. Ramachandra Iyer

**Municipal High School, Kurnool**

66. Sri G. Siva Rao
67. ,, K. N. Pasupathi Iyer

68. Sri. S. Vaidyanatha Iyer
69. ,, K. Chinna Subba Rao
70. ,, H. Dattatreyulu
71. ,, V. Seshaiah

**Cole's Memorial High School, Kurnool**

72. Sri. K. Neelakanta Rao
73. ,, P. Raju

**Hindu Theological High School, Madras**

74. Sri Gurukula Dharmacharya
,, K. Rangaswamy Iyengar
75. ,, R. S. Subrahmanya Iyer
76. ,, C. V. Subramanya Iyer
77. ,, C. V. Gopala Iyer

**Madras Teachers' Guild**

78. Sri V. Srinivasan
79. ,, T. P. Srinivasavaradan
80. ,, S. Rajagopala Iyer
81. ,, V. K. Sourirajan
82. ,, N. Ganapathy Iyer
83. ,, K. Ramaswamy Sastri
84. ,, P. Subrahmanya Ayyah
85. ,, K. S. Srinivasathathachari
86. ,, T. S. Rajagopala Iyengar
87. ,, E. Bashyakacharlu
88. ,, S. Swaminatha Iyer
89. ,, G. Srinivasan
90. ,, M. S. Sabhesan
91. ,, R. Mahadevan
92. ,, P. S. Ramaswami
93. ,, S. Natarajan
94. ,, S. Madhava Rao
95. ,, N. Subrahmanyam
96. ,, C. S. Rajagopalan
97. ,, V. Bhuvarahamurthi Rao
98. ,, A. K. Sitaraman
99. ,, N. Subrahmanyam
100. ,, P. V. Ramaswami
101. ,, R. Sarangapani Iyengar
102. ,, V. Thyagarajan
103. ,, T. V. Ramnmurthi
104. ,, M. P. Rajagopal
105. ,, K. S. Chandrasekharan
106. ,, K. Nagaraja Rao
107. ,, V. Ramaswami Iyengar
108. ,, N. Krishnamachari
109. ,, C. S. Ramamirtham Iyer
110. ,, P. Vaidyanathaswami Iyer
111. ,, M. K. Ramamurti Iyer

**High and Training School Pasumalai**

112. Rev. G. P. James
113. Sri M. Somasundaram

**U. C. High School, Madura**

114. Sri V. Aravamuda Iyengar

**R. K. Middle School, Allur (Nellore)**

115. Sri M. Seshachari
116. ,, M. Narasimhachari

**St. Peter's Middle School, Nayudupet**

117. Sri V. S. Venkata Narayana

**N. M. Board High School, Tirupattur (Rd.)**

118. Sri K. S. Venkatasubramanya Iyer

**Rajah's High School, Sivaganga**

119. Sri R. Narayanan Servai
120. ,, S. Dharmarajan
121. ,, S. Subramanya Sastry

**Sir S. High School, Tirukattupalli**

122. Sri V. Guruswami Sastri

**Municipal High School, Mayavaram**

123. Sri V. Krishna Iyer
124. ,, S. Seshagiri Iyer

**Board High School, Krishnagiri**

125. Sri K. S. Chengalroya Iyer

**G. H. M. High School, Salem**

126. Sri A. V. Sundaresa Iyer

**Board High School, Rasipuram**

127. Sri M. K. Swaminatha Iyer
128. ,, A. V. Ranga Rao

**Thirthapathi High School, Ambasamudram**

129. Sri E. H. Parameswaran

**Municipal High School, Karur**

130. Sri R. S. Srinivasa Iyengar
131. ,, M. S. Perimbamani
132. ,, T. K. Sankara Iyer
133. ,, D. J. Rajendiram
134. ,, S. V. Narayana Rao
135. ,, R. Krishnamoorthi Rao

**Madras Teachers' Guild**

136. Sri' N. Ramarwami Iyengar

**Taluq Board Elementary School Teachers' Union, Tiruttani**

137. Sri. P. M. Subramanyam

**Government Training School for Women, Madanapalle**

138 and 139 (Two delegates)

**N. S. M. V. P. S. High School, Devakottai**

140, (One delegate)